PUBLIC LIBRARY
JAFFNA.

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

25.09.2013 - மலர் 10, இதழ் 30

'ஸ்கேன்' செய்யும் நவீன பேனா!






சிறுவர்களுக்கான Android கைக்கணினி

இந்த நிலத்தின் ஒவ்வொரு அங்குலமும்
என் மக்களுக்குப் புனிதமானது.
மரங்களும் கடற்கரைகளும் வெற்றுத்
தரைகளும் அடர்ந்த காடுகளும்
மேகங்களும் ஓசையெழுப்பும் சிறு
உயிரினங்களும் என் மக்களின் மனதிலும்
அவர்கள் பெற்ற அனுபவங்களிலும்
தூய்மையானவையாகும். இவை
அனைத்தும் நினைவுச் சின்னங்கள்.
வெள்ளையர்கள் விண்ணில்
நட்சத்திரங்களில் காலடி வைக்க
முனையும்போது, தாம் பிறந்த
மண்ணை மறந்துவிடுகின்றனர். எனினும்,
எமது முன்னோர்கள் ஒருபோதும் இந்த
மண்ணை மறந்துவிடவில்லை.
ஏனெனில், இது பூர்வ ஜென்ம பூமியாகும்.

-சியாட்டல்

# என்றும் போற்றப்படும் சியாட்டலின் உரை...!



விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாயக்கர்களின் எதிரிகள்

நாயக்கர்களின் எதிரிகளாகத் திகழ்ந்த நிலமேக்கள், திசாவனிகளின் இடமாற்றத்தின் போது மக்களை அதற்கெதிராகத் தூண்டுவதை அறிந்ததும் மன்னன் நிலமேக்களுக்குத் தண்டனை வழங்கினான். அத்தோடு, நிலமேக்களின் அதிகாரங்களைச் சீர்குலைக்கவும் முயற்சித்தான். இக்காரணங்களினால் ஆட்சிசெய்யும் அரச வம்சத்தை மாற்றுவதற்கு நிலமேக்கள் எண்ணினர். மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதற்கு மக்களுக்கு உதவினர். ஆங்கிலேயரோடு இணைந்து சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர்.

பொதுவாக, மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தீய குணங்கள் படைத்தவர் அல்ல. அவர் பரந்த மனப்பான்மைக் கொண்டவராகவே திகழ்ந்தார். மக்களுக்கு எப்பொழுதும் நீதி கிடைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இருந்தார். அவர் நிலமேக்களுடன் மாத்திரமே பகைமை பாராட்டினார். அவர்கள் மக்களின் எதிரிகள் என மன்னன் நினைத்தார். மக்களை அவர்களிடம் இருந்து பாதுகாக்க பெருமுயற்சி எடுத்தார். மக்களின் துன்ப துயரங்களை துடைக்க உதவிகள் சலுகைகள் வழங்க மன்னன் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நிலமேக்கள் தடையாக இருந்தனர். மக்களை மன்னனுக்கு எதிராகச் சினம்மூட்டுவதும் நிலமேக்களே.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் மனைவியர் இருவரும் அவர்மூலம் பிறந்த மகன்மார் இருவரும் மகள்மார் இருவரும் இறந்தனர். இம் மனைவியர் இருவரும் கம்பளை தெய்யன் என்பவரின் மகள்மார்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# 17 வயதுடைய தாவரவியலாளரின் முயற்சியில் உருவான உலகின் மிகப்பெரிய லில்லி மலர்

தாவரவியலாளராகப் பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கும் 17 வயதுடைய ஹன்னா றொஜெர்ஸ் (Hannah Rogers), பிரித்தானியாவின் 'ஐல் ஒ∘ஃப் வைட்' (Isle of Wight) எனும் தீவில் அமைந்துள்ள வென்ட்னோர் தாவரவியல் பூங்காவின் விஞ்ஞானிகளுடன் இணைந்து, எமசோனிய லில்லி தாவர இனத்தில் விக்டோரியா க்ருசியானா மற்றும் விக்டோரியா எமசோனியா எனும் இரண்டு வகைகளையும் இணைத்து கலப்பினமொன்றை உருவாக்கியுள்ளார். அதிலிருந்து பெறப் பட்ட கலப்பினத் தாவரத்தின் மலர்தான் 'உலகின் மிகப்பெரிய லில்லி மலர்' என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


17 வயதான ஹன்னா றொஜெர்ஸ், தான் உருவாக்கிய லில்லி மலருடன் காணப்படுகின்றார்.


பூத்திருக்கும் வெள்ளை மலர்


பெரிய மலரை உருவாக்கும் சிறிய விதைகள்

இரவில் சஞ்சரிக்கும் ஸ்காரப் எனும் வண்டினமே இத்தாவரத்தின் மகரந்தச் சேர்க்கைக்கு வழியமைக்கின்றது. இந்த மலர் மலர்ந்திருக்கும் இரு இரவுகளில், முதல்நாள் இரவில் இம்மலரிலிருந்து அன்னாசிப்பழ வாசம் வீசும். அப்போது ஸ்காரப் வண்டினங்கள் இந்த வாசனையினால் கவரப்பட்டு மலரை நோக்கி வருகின்றன. முதல்நாள் இரவில் வெள்ளை நிறத்தில் இருக்கும் இந்த மலர், அடுத்தநாள் கடும் சிவப்பு நிறத்தை அடையும். பின்பு நீரில் மூழ்கிவிடும். இந்த மலரின் ஆயுட்காலம் இரண்டு தினங்கள் மட்டுமே!


இந்த ராட்சத தாவரம் 6 அடி அகலம் கொண்டது. அதி விரைவாக வளர்கின்றது. சிறிய விதையிலிருந்து உருவாகும் இத்தாவரம் முழுமையாக வளர மூன்று மாதங்கள் தேவை. இந்த புதிய கலப்பினத் தாவரத்தைப் பெறுவதற்காக இதன் சிறிய விதைகள் 8 அடியுடைய சதுர சாடிகளில் விதைக்கப்படுகின்றன. இதற்கு இரண்டு தொன் பசளை தேவை. அதன்பின்னர் 22,000 கொள்கலன் நீர் கொண்ட நீர்த்தேக்கத்தில் அந்தச் சாடிகள் அமிழ்த்தி வைக்கப்படுகின்றன. இந்த முயற்சியில் உருவான முதலாவது மலர் கடந்த ஜூலை மாதம் மலர்ந்தது. எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் இத்தாவரம் இறந்துவிடும்.

"இந்த ராட்சத லில்லி மலரின் இனப்பெருக்கச் செயற்பாடு மிகவும் விசித்திரமானது. இரவில் புதிதாக மலர்ந்தவுடன் வெண்மையாக இருக்கும் மலர், கடுமையான வாசனையையும் வீசும். அதாவது, நன்கு பழுத்த அன்னாசிப்பழத்தின் வாசனையே இதன்போது உணரப்படும். இதுதான் மகரந்தச் சேர்க்கைக்கான உத்தியாகும். இங்கு ஸ்காரப் வண்டினம் மகரந்தச் சேர்க்கையை மேற்கொள்கின்றது'' என்று பிரித்தானியாவின் வென்ட்னோர் தாவரவியல் பூங்காவின் பணிப்பாளர் கிறீஸ் கிட் குறிப்பிடுகின்றார்.

"இந்த வண்டு மலருக்கு மலர் தாவி, தேன் அருந்த வரும்போது இந்த மலர் தன் இதழ்களை விரித்து வண்டினை அரவணைத்துக் கொள்கின்றது. அடுத்தநாள்வரை இந்த வண்டு மலரினுள் சிறைப்பட்டிருக்கும். இதன்போது, மலரினுள் வியப்பானதொரு விடயம் நடைபெறுகின்றது. வெண்மையான மலரில் பால் மாற்றம் நடைபெற்றிருக்கும். அதாவது, மலர் கடும் சிவப்பு நிறத்தை அடைந்து ஓர் ஆண் மலராக மாறியிருக்கும். இந்த நிலையில் வண்டானது, குறித்த மலரிலுள்ள தேனை முழுமையாகக் குடித்துவிட்டு, அந்த ஆண்பூவின் மகரந்தத்தை உடலில் தேய்த்துக்கொண்டு மற்றொரு வெள்ளை மலரை நோக்கிப் பறந்து செல்லும். அதாவது, அடுத்தநாள் இரவு மீண்டும் மலர் மலர்ந்த பின்னர்தான் குறித்த வண்டு மலரிலிருந்து வெளியேறுகின்றது. இவ்வாறுதான் இந்த மலரின் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகின்றது. எவ்வாறாயினும், இந்த மிகப்பெரிய மலரின் உருவாக்கத்திற்காக "ஹன்னா இரவு முழுவதும் கண்விழித்துப் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டார்'' என்று கிறீஸ் கிட் மேலும் குறிப்பிடுகின்றார்.

**கவிதா**




சிவப்பு நிறமாக மாறியிருக்கும் மலர்

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேதிக விபரங்களுக்கு
பெயர் / முகவரியை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப் பயிற்சி/உரையாடல் வீடியோ சீடி - 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று தமிழ் மூலம்.
@- அழகிய கைக்கடிகாரம (Watch) ஒன்று / மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோருக்கும் வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/= மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 081-2227711 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமைக்குக் கிடைத்த பரிசு

அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மழையின்றி வயல்கள் வறண்டு தோற்றமளித்தன. நீர் பற்றாக்குறை! உணவுக்கும் வழியில்லை. அங்கு பெரும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் இரக்க குணம் கொண்டவர். அவரிடம் ஊர்மக்கள் சென்று தங்கள் நிலைமையைக் கூறினார்கள். தங்கள் குழந்தைகளுக்கு மட்டும் ஒரு ரொட்டித்துண்டை அளிக்கும்படி கேட்டனர். அதற்கு ஒப்புக்கொண்ட செல்வந்தர், தனது வேலையாட்களிடம் ஊரிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும்படி கூறினார். அதற்கேற்றாற்போல் ரொட்டிகள் வாங்கச் சொன்னார். ரொட்டிகள் அதிகரிக்கவும் கூடாது. குறைவாகிவிடவும் கூடாது என்றும் கட்டளையிட்டார். குழந்தைகள் மூன்று வேளைகளுக்கும் ரொட்டி வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்தார்.

அன்றிலிருந்து, காலையில் கூடையில் ரொட்டிகளை வைத்துக்கொண்டு செல்வந்தர் வெளியில் அமர்ந்துகொண்டார். குழந்தைகள் ரொட்டியைப் பார்த்தவுடன், போட்டி போட்டுக்கொண்டு, "எனக்கு முதலில்... எனக்குப் பெரிய ரொட்டி வேண்டும்..." என்று கூச்சலிட்டுக்கொண்டும்



ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டும் ரொட்டிகளை வாங்கியபடி போய்க்கொண்டிருந்தனர்.

ஒரே ஒரு சிறுமி மாத்திரம் அனைவரும் வாங்கிய பின்னர் கடைசியில் பொறுமையாக வாங்கிச் சென்றாள். அதேபோல பகல் வேளையிலும் ரொட்டி வழங்கப்பட்டது. அப்போதும் அதே கூச்சல்... அதே குழப்பம்... அந்தச் சிறுமி மட்டும் கடைசியாக வந்து வாங்கிச் சென்றாள். செல்வந்தர் அந்தச் சிறுமியையே கவனித்துக்கொண்டிருந்தார்.

மீண்டும் மாலையில் அதேதோன் நடந்தது.

அந்தச் சிறுமி மிகவும் பொறுமையாக இருந்து எல்லோரும் வாங்கி முடித்ததன் பின்னர் ரொட்டியைப் பெற்றுக்கொண்டு தனது வீட்டுக்குச் சென்றாள். தனது தாயிடம் கொடுத்து உண்பதற்குத் தயாரானாள். ரொட்டியை இரண்டாகப் பிய்த்த தாய் ரொட்டிக்குள்ளிருந்து இரு தங்க நாணயங்கள் விழுந்ததைக் கண்டாள். அதிர்ந்துபோனாள்! அவற்றை எடுத்துக்கொண்டு போய் அந்தச் செல்வந்தரிடம் கொடுத்துவிட்டு வரும்படி சிறுமியை அனுப்பினாள்.

சிறுமியும் நாணயங்களை எடுத்துக்கொண்டுபோய் செல்வந்தரிடம் கொடுத்தாள். அதற்கு செல்வந்தர், "இது உன் பொறுமைக்குக் கிடைத்த பரிசு! நீயே இதை வைத்துக்கொள்..." என்று கூறி அவளைப் பாராட்டினார்.

சிறுமி மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தபடி தன் தாயிடம் அவற்றைக் கொடுப்பதற்காக ஓடினாள்.

# பக்தனின் குற்றம்



பக்தன் ஒருவனது கனவில் இறைவன் காட்சியளித்தார். அவரிடம் அவன், "கனவில் வரும் தாங்கள் நேரில் வரக்கூடாதா?" என்று பெருமூச்சுடன் கேட்டான்.

"நாளை வருகிறேன்..." என்றார் கடவுள்.

மறுநாள் அனைத்து ஏற்பாடுகளும் செய்துவிட்டுக் கடவுளின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான் பக்தன்.

அப்போது வயதான கிழவர் ஒருவர் வந்து, "ஐயா, பசி.. ஏதாவது சாப்பிடப் போடுங்களேன்.." என்று கெஞ்சினார்.

கடவுள் வரும் நேரத்தில் இந்தப் பிச்சைக்காரர் வந்து நிற்பதைக்கண்டு எரிச்சலடைந்த பக்தன், அந்தக் கிழவரை விரட்டியடித்தான்.

பகல் வேளையும் ஆனது... கடவுள் வரவில்லை. பிரசாதங்களும் ஏனைய உணவு வகைகளும் அப்படியே இருந்தன.

அப்போது கைக்குழந்தையுடன் ஓர் ஏழைப் பெண் வந்து பிச்சை கேட்டாள். கடவுள் இன்னும் வராததால், பொறுமையிழந்த நிலையிலிருந்த அவன் அந்தப் பெண்ணையும் விரட்டிவிட்டான்.

மாலையும் வந்தது. கடவுள் வரவே இல்லை. பக்தனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

கடவுள் இப்படி ஏமாற்றிவிட்டாரே என்று பக்தன் எண்ணியபோது, ஒரு நாய் வீட்டிற்குள் நுழைந்து கடவுளுக்காக வைத்திருந்த உணவு வகைகளைச் சுவைக்க ஆரம்பித்தது. ஆத்திரமடைந்த பக்தன், ஒரு தடியை எடுத்து நாயை அடித்து விரட்டினான். அது வலி பொறுக்க முடியாமல் கத்திக் கொண்டே ஓடி மறைந்தது.

மிகுந்த விரக்தியுடன் பக்தன் படுக்கையில் படுத்துக்கொண்டு யோசித்துக்கொண்டிருந்தான். அப்படியே தூங்கியும்விட்டான். மீண்டும் கடவுள் பக்தனின் கனவில் காட்சியளித்தார். "கடவுளே, தாங்கள் இப்படி என்னை ஏமாற்றலாமா? உங்களுக்காக இன்று முழுவதும் காத்திருந்தேன். நீங்கள் வரவேயில்லையே..." என்று கேட்டான்.

அதற்குக் கடவுள், "நான் ஏமாற்றவில்லை! நான் மூன்று முறை உன்னைத் தேடி வந்தேன். நீதான் ஒவ்வொரு முறையும் என்னை விரட்டிவிட்டாயே? இப்போது என்னைக் குற்றம் சொல்லி என்ன பயன்?" என்று பதிலளித்தார்.

தனது வீட்டைத் தேடிவந்த, ஏழைகளின் வடிவில் கடவுளைக் காணத் தெரியாமல், நல்ல மனமில்லாமல் அவர்களை விரட்டியமைக்காக வருந்தினான் அந்த பக்தன்.

# நிலத்தின் உரிமை

ஓர் அரசர் தம்மை ஆசிர்வதிக்க வந்த வயதான துறவியை அழைத்துப்போய் தமக்குச் சொந்தமான வயல், வரப்பு, தோப்புகளைப் பெருமையுடன் காட்டி, "இவ்வளவும் என்னுடையது சுவாமி" என்றார்.

துறவி கேட்டார். "இல்லையே அப்பா! இதே நிலத்தை என்னுடையது என்று ஒருவன் சொன்னானே" என்றார்.

"அவன் எவன்? எப்போது சொன்னான்?" என்று சீறினார் அரசர்.

"ஐம்பது வருடத்திற்கு முன்" என்றார் துறவி.

அரசர், "அது என் தாத்தாதான். ஐம்பது ஆண்டுகளாக நாங்கள் இந்த நிலத்தை யாருக்கு விற்கவே இல்லை" என்றார். "இருபது ஆண்டுகளுக்கு முன் வேறொருவர் இது என் நிலம் என்றாரேயப்பா" எனக் கேட்க, "அவர் என் அப்பாவாக இருக்கும்" என்றார் அரசர்.

"நிலம் என்னுடையது, என்னுடையது என்று என்னிடம் காட்டிய அந்த இருவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்ட துறவிக்கு, அதே வயலுக்கிடையில் தெரிந்த இரு மண்டபங்களைக் காட்டி, "அந்த மண்டபங்களுக்குக் கீழேதான் அவர்களைப் புதைத்து வைத்திருக்கிறோம்" என்றார் அரசர். துறவி சிரித்துக்கொண்டே, "நிலம் இவர்களுக்குச் சொந்தமா? அல்லது இவர்கள் நிலத்திற்குச் சொந்தமா? என் நிலம் என்றவர்கள் நிலத்திற்குச் சொந்தமாகிவிட்டனர். அவர்கள் இப்போது இல்லை. ஆனால், நிலம் மட்டும் இருக்கிறது. இது என்னுடையது எனக்கூறும் நீயும் இந்த நிலத்திற்குள் புதைக்கப்படுவாய். உன் மகன் வந்து இது என்னுடையது என்பான்" என்று கூறி முடித்தார் துறவி. உண்மையை உணர்ந்தார் அரசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் ஒழுக்கத்தைப் பேணி நடப்பது அவசியம்





மாணவர்கள் அறிவைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவதைப் போன்று, அவர்களது ஒழுக்கம், மானம் சார்ந்த விடயங்களிலும் அவதானமாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். தற்காலத்தில் ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்களே, பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர். இந்த ரீதியில் ஒழுக்கவியல் விடயத்தில் மாணவர்களது பங்களிப்பு என்பது மிக முக்கியமானது. ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் சவாலான விடயம் என்பதனால், அந்த விடயத்தில் நாம் மிகவும் கரிசனையுடன் இருக்க வேண்டும். சிலவேளைகளில் சில மாணவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஒழுக்கச் சீர்கேட்டிற்கு ஆளாகின்றனர். ஆகவே, அத்தகைய தருணங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் கட்டுப்படுத்திக்கொள்ளவும் மாணவர்கள் யாவரும் நிதானத்துடன் செயற்பட வேண்டும்.







மாணவப் பருவத்தில் அவர்கள் பல்வேறு வகையான மனிதர்களுடன் பேச, பழக வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருப்பதால், ஏனையவர்களுடன் பழகும் விதத்திலும் பழக வேண்டியவர்களைத் தெரிவுசெய்யும் விதத்திலுமே மாணவர்களுக்கு அவதானம் அவசியம். அத்துடன், உடலியல் அல்லது உளவியல் துஷ்பிரயோகங்கள் குறித்தும் மாணவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மாணவிகளைப் பொறுத்த வரையில், எங்கு செல்வதாக இருந்தாலும் பாதுகாப்பற்ற நிலையில் பிரயாணம் செய்யவோ, தனித்திருக்கவோ அல்லது தங்கியிருக்கவோ கூடாது. தக்க துணையின்றி இவ்வாறு செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தவிர, மாணவர்களுக்குத் தீய மனப்பாங்குகள் மற்றும் சிந்தனைகள் ஏற்பட்டால், வணக்க வழிபாடுகளில் அல்லது தியானத்தில் ஈடுபட வேண்டும். மேலும், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுவதாலோ அல்லது அதில் ஈடுபடுவதாலோ கற்றலும் பாதிப்படையக் கூடும். இதனால், பல தீய விளைவுகளையும் சந்திக்க நேரிடும். மாணவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும் விதத்தில் ஏதாவது அசம்பாவிதங்கள் நடைபெற்றால்; தனக்கு நெருக்கமானவர்களிடம் அதுபற்றிக் கூற வேண்டும். எனினும், அதனைப் பகிரங்கப்படுத்துவது மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடும். ஆகவே, மாணவர்கள் ஒழுக்கவியல் சம்பந்தமாக முதற்கண் சிந்தனையுடன் செயற்படுவது காலத்தின் தேவையாகவே கருதப்படுகின்றது.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

---


## "எனது இலங்கை, எனது எதிர்காலம்"
## இளவயதினருக்கான கலைத்திறன் போட்டி

ஐக்கிய நாடுகள் சபையானது (UN) இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை எட்டும் நோக்கில் இலங்கையுடன் மிக நெருக்கமாக இயங்கி வருகின்றது. இதன் மூலம் நாம் அனைவரும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை எட்டமுடியும். பின்வரும் நான்கு பிரதான தொனிப் பொருட்களின் கீழ் எமது வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

- அனைவருக்கும் உரிய வாய்ப்பினை அளிக்கவல்ல பொருளாதார செழுமை மிக்க எதிர்காலம்
- அனைவருக்கும் சிறப்பான வாழ்க்கைத் தரமும் அடிப்படைச் சேவைகளும்
- சமூகம் சார்ந்த நியாயமான, விரிவான, ஒன்றுபட்ட எதிர்காலம்
- பாதுகாப்பான வாழ்க்கைக்கு பசுமையான சூழல்

சாதகமான மாற்றத்தினையும் அபிவிருத்தியையும் உருவாக்குவதற்காக இளைஞர் சக்தியைப் பயன்படுத்த முடியும் என்பதிலும் ஐக்கிய நாடுகள் சபையானது நம்பிக்கை கொண்டுள்ளது. இலங்கையின் எதிர்காலம் தொடர்பிலான உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை மேலே குறிப்பிடப்பட்ட நான்கு தொனிப் பொருட்களின் ஏதேனும் ஒன்றின் கீழ் ஓர் கலையாக்கமாக உருவாக்குமாறு இவ்வருடம் ஐக்கிய நாடுகள் சபை உங்களை அன்போடு அழைக்கின்றது.

பங்குபற்ற தகுதியுடையவர்கள்:
பின்வரும் பிரிவுகளின் கீழ் அனைத்து இளவயதினரும் பங்குபற்ற முடியும்
- வயதெல்லை 10-16: கனிஷ்ட பிரிவு - ஓவியக் கலை (காகிதம்)
- வயதெல்லை 17-29: சிரேஷ்ட பிரிவு - ஓவியக் கலை (காகிதம்)
- வயதெல்லை 17-29: சிரேஷ்ட பிரிவு - டிஜிட்டல் (காவியக்) கலை (இலத்திரனியல் ஊடகம்)

விருதுகள்:
- ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு விருதுகளும் தமது கலைத்திறனை மேலும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.
- சிறந்த 30 கலையாக்கங்கள் ஐ.நா தினம், ஐ.நாவின் ஏனைய நிகழ்வுகள், கண்காட்சிகள் மற்றும் வெளியீடுகளில் காட்சிப்படுத்தப்படும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பங்குபற்றுவதற்கான படிமுறைகள்:
- உங்களின் கலையாக்கத்தை 30.09.2013 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எம்மை வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:
  கலைத்திறன் போட்டி - "எனது இலங்கை, எனது எதிர்காலம்"
  ஐக்கிய நாடுகள் அலுவலகம்,
  இல. 202-204, பௌத்தாலோக்க மாவத்தை,
  கொழும்பு 7.
- இலத்திரனியல் ஊடகம் மூலமான உங்கள் டிஜிட்டல் (காவிய) ஆக்கங்களை info.lk@one.un.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது மேலே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு இறுவட்டு ஒன்றின் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.
- உங்கள் ஆக்கங்களுடன் பெயர், முகவரி என்பவற்றையும் குறிப்பிட்டு அனுப்பவும்.
- மேலதிக தகவல்களுக்கு 011-2580691 ext: 274 எனும் தொலைபேசி இலக்கத்தில் திங்கள் முதல் வெள்ளி வரையில் மு.ப 9 மணி முதல் பி.ப 4 மணி வரை தொடர்புகளை ஏற்படுத்தலாம் அல்லது www.un.lk/news/artcomp எனும் இணையத்தளத்தை நாடவும்.

ஆக்க வடிவமைப்புக்கான நிபந்தனைகள்:
ஓவியங்கள்
- A2 காகிதம் (23.4x16.5 அங்குலம்)
- நாலா பக்கங்களிலும் 4 செ.மீ அளவிலான எல்லை
- சட்டம் (Frame) செய்திருத்தலாகாது
- பங்குபற்றுனர்கள் விரும்பிய உத்திகள், ஊடகம், வடிவமைப்பினை பயன்படுத்தலாம்.

டிஜிட்டல் ஆக்கங்கள்:
- அளவு: 800X550px
- வடிவம்: EPS & Jpeg
- கொள்ளளவு: 3MB க்கும் குறைவாக இருத்தல்
- புகைப்படங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

நியதிகளும் நிபந்தனைகளும்:
- அனைத்து படைப்புகளும் விண்ணப்பதாரியின் சுய படைப்பாக இருத்தல் வேண்டும். 18 வயதிற்குட்பட்டோரின் ஆக்கங்கள் பாடசாலை அதிபரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
- ஒரு விண்ணப்பதாரியால் ஒரு ஆக்கம் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.
- 30.09.2013 அன்று குறித்த வயதெல்லைக்குள் அடங்குவோர் மாத்திரமே பங்குபெற முடியும்.
- விண்ணப்பிக்கப்படும் அனைத்து ஆக்கங்களும் ஐக்கிய நாடுகளுக்கு உரித்துடையதாகும். இவற்றை வெளியிடும் அல்லது பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்தும் உரிமை ஐ.நாவின் இலங்கை அலுவலகத்திற்கே உரியதாகும்.
- கலையாக்கங்கள் அனைத்தும் செயற்றிறன், மூல ஆக்கம், மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றினால் பரிசீலிக்கப்படும்.
- தெரிவு செய்யப்பட்ட இறுதிச் சுற்றுக்கு தேர்வாகும் விண்ணப்பதாரிகள் அவர்களின் ஆக்கங்களை உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்தும் சந்தர்ப்பங்கள் காணப்படக்கூடும்.
- இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

International Labour Organization · UN Volunteers · World Health Organization Sri Lanka · OCHA · FAO · UNFPA · UN-HABITAT · UNHCR The UN Refugee Agency · UNDP · UNOPS · IOM • OIM · WFP World Food Programme · unicef · UNESCO · UNAIDS

DailyMirror · The Sunday Times · ලංකාදීප · විජය · விஜய் · AOD · e-wis · HNB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் போற்றப்படும் சியாட்டலின் உரை



கி.பி 1853 ஆம் ஆண்டு ஃபிராங்ளின் பியர்ஸ் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இக்காலகட்டத்தில் ஐரோப்பியரால் சுதேச அமெரிக்கர்களுக்குப் பல துன்பங்கள் ஏற்படலாயின. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி ஃபிராங்ளின் பியர்ஸ் நடவடிக்கைகளை எடுத்தார். அதன்படி, சுதேச செவ்விந்தியர்களின் நிலங்களை வெள்ளையர்களுக்கு விற்கும்படி குறிப்பிட்டு, செவ்விந்தியத் தலைவருக்கு அவர் கடிதமொன்றை அனுப்பினார். அக்கடிதத்திற்கு செவ்விந்தியத் தலைவர் சியாட்டல், பதில் ஒன்றை எழுதி ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். சுற்றாடல் தொடர்பாக இதுவரை வெளிவந்த விடயங்களில் மிகச் சிறப்புவாய்ந்த விடயங்கள் பலவற்றை உள்ளடக்கிய கடிதமாக அது கருதப்படுகின்றது. மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு இக்கடிதத்தில் சிறப்பாக விளக்கப்படுகிறது.



## அமெரிக்கா கண்டுபிடிக்கப்படல்

நாடுகாண் பயணிகளில் ஒருவரான கிறிஸ்டோபர் கொலம்பஸ், கி.பி. 1492 ஆம் ஆண்டு அமெரிக்கக் கண்டத்திற்குச் சொந்தமான ஹிஸ்பானியோலா என்ற தீவில் வந்திறங்கினார். மேற்கு நாடுகளிலிருந்து இங்கு ஒருவர் வந்தடைந்தது இதுவே முதற்தடவையாகும். இதன்பின்னர் அமெரிக்கோ வெஸ்புசி அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அன்றுமுதல் அமெரிக்கக் கண்டத்தை நோக்கி ஐரோப்பியர்கள் பயணிக்கத் தொடங்கினர். அவர்கள் அமெரிக்கக் கண்டத்தில் குடியேற்றங்களை அமைத்தனர். அத்துடன், அங்கு நகரங்களும் உருவாகின. போக்குவரத்துப் பாதைகள், புகையிரதப் பாதைகள், பயிர்ச் செய்கை நடவடிக்கைகள், தொழிற்சாலைகள் என்பன தோற்றம் பெற்றன. இவ்வாறு ஐரோப்பியரால் அமெரிக்க சுதேச மக்களின் நிலங்கள் படிப்படியாக ஆக்கிரமிக்கப்பட்டன. மேலும், இந்த இனத்தவர்களில் ஒரு பிரிவினர் கொல்லப்பட்டனர்.

## செவ்விந்தியர்கள்

அமெரிக்காவில் வாழும் சுதேசிகள் 'அமெரிக்க இந்தியர்கள்', 'செவ்விந்தியர்கள்' போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். அமெரிக்காவில் பல்வேறு சுதேச கோத்திரங்கள் வாழ்கின்றன. இன்றளவில் அவர்கள் கெனடா எல்லையிலும் ஃப்ளோரிடா மாநிலத்திலுமே வாழ்கின்றனர். காடுகளிலுள்ள கற்குகைகளிலும் தாம் அமைத்துக்கொண்ட சிறிய வீடுகளிலும் அவர்கள் வசிக்கின்றனர். மிருகங்களை வேட்டையாடியும் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டும் அவர்கள் தமது வாழ்க்கையை நடாத்துகின்றனர். சோளம், பதப்படுத்தப்பட்ட இறைச்சி, போஞ்சி என்பன இவர்களின் முக்கிய உணவுகளாகும். இவர்கள் பல தெய்வங்களையும் வழிபடுகின்றனர். அலங்கார வேலைப்பாடுகள், ஆபரணங்கள், களிமண்ணால் பொருட்கள் செய்தல் என்பனவற்றில் செவ்விந்தியர்கள் சிறந்து விளங்குகின்றனர்.




## 'சியாட்டல்' என்பவர் யார்?

கி.பி 1780-1866 வரை வாழ்ந்த சுதேச செவ்விந்தியரே 'சியாட்டல்' என்பவராவார். இவர் சுதேச செவ்விந்தியர்களின் தலைவராக விளங்கினார். டுவாமிஷ் கோத்திரத்தைச் சேர்ந்த இவர், 1780 ஆம் ஆண்டு வொஷிங்டனில் ப்ளேக் தீவில் பிறந்தார். சியாத்ல், சீஆத், சியாலத் போன்ற பெயர்களாலும் அழைக்கப்பட்ட இவர், 'சியாட்டல்' என்ற பெயரிலேயே பிரபலமானார்.


செவ்விந்தியத் தலைவர் சியாட்டல்

கி.பி 1854 ஆம் ஆண்டு சியாட்டலால் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்ளின் பியர்ஸுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம், சுற்றாடல் தொடர்பாக வெளியிடப்பட்ட சிறந்த கடிதமாகக் கருதப்படுகிறது. டார்வின் பரிணாமவாதக் கொள்கையை முன்வைக்கும் முன்னரே, சியாட்டல் உயிரினங்களுக்கிடையிலான தொடர்பினை விளங்கிக்கொண்டதாக இக்கடிதத்திலிருந்து தெரியவருகிறது. அமெரிக்க பூர்வீகக் குடிக[illegible] கருதப்படுகின்ற செவ்விந்தியர்களின் வசம் எஞ்சியிருந்த நிலப் பரப்பையும் விலைக்குத் தந்துவிடுமாறு கோரப்பட்டிருந்த அந்த இக்கட்டான தருணத்தில் தலைவர் சியாட்டல் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் ஈடு இணையற்ற ஓர் உரையை நிகழ்த்தினார். இன்றுவரை அந்த உரை புகழ்பெற்ற-இலக்கியத் தரம்வாய்ந்த உரையாகவே கருதப்படுகின்றது.

இன்றைய சியாட்டல் நகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சியாட்டலின் உரை


வொஷிங்டனில் வாழும் வெள்ளையர்களின் தலைவர் எமது நிலங்களைப் பணம் [illegible]த்து வாங்குவதற்கு விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன், எம்முடனான நட்பையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அமெரிக்கத் தலைவரின் வேண்டுகோள் தொடர்பாக, எமது கவனத்தைத் திருப்பியுள்ளோம். எமது நிலங்களை நாம் வெள்ளையர்களுக்கு விற்காவிடின், அவர்கள் ஆயுதபலத்தால் அதனை அபகரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும், நீல நிற வானத்தையும் வளமான நிலத்தையும் பணங்கொடுத்து வாங்க முடியுமா..? இதனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. காற்றின் தூய்மையும் நீரின் குளிர்மையும் எம்முடையதல்ல. அவ்வாறாயின், நீங்கள் அதனை எவ்வாறு விலை கொடுத்து வாங்க முடியும்..?

இந்த நிலத்தின் ஒவ்வொரு அங்குலமும் என் மக்களுக்குப் புனிதமானது. மரங்களும் கடற்கரைகளும் வெற்றுத்தரைகளும் அடர்ந்த காடுகளும் மேகங்களும் ஓசையெழுப்பும் சிறு உயிரினங்களும் என் மக்களின் மனதிலும் அவர்கள் பெற்ற அனுபவங்களிலும் தூய்மையானவையாகும். இவை அனைத்தும் செவ்விந்தியரின் நினைவுச் சின்னங்கள். வெள்ளையர்கள் விண்ணில் நட்சத்திரங்களில் காலடி வைக்க முனையும்போது, தாம் பிறந்த மண்ணை மறந்துவிடுகின்றனர். எனினும், எமது முன்னோர்கள் ஒருபோதும் இந்த மண்ணை மறந்துவிடவில்லை. ஏனெனில், இது செவ்விந்தியரின் பூர்வ ஜென்ம பூமியாகும்.

நாங்கள் பூமியின் ஒரு பிரிவாகும். பூமி எங்களில் ஒரு பிரிவு. மணந்தரும் மலர்கள் எம் சகோதரிகள். மான்களும் கழுகுகளும் குதிரைகளும் எம் சகோதரர்கள். மலைகளில் ஊற்றெடுத்து, புற்றரைகள் மற்றும் வனாந்தரங்கள் வழியாகப் பாய்ந்து ஓடும் நீரும் மனிதனும் மிருகங்களும் ஒரே குடும்பத்தின் உறுப்பினரே!

எமது நிலங்களைப் பணங்கொடுத்து வாங்குவதற்கு வெள்ளையர்களின் தலைவர் விரும்புகின்றபோதிலும், அந்த வேண்டுகோளை எம்மால் நிறைவுசெய்வது கடினமான செயலாகும். பிரச்சினையின்றி நாம் வாழ்வதற்குத் தகுந்த இடத்தை ஒதுக்கித் தருவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவ்வாறாயின், அவர் எம் தந்தையாவார். நாம் அவரது மக்களாவோம். ஆதலால், அவரது வேண்டுகோள் தொடர்பாக நாம் சிந்தித்துப் பார்ப்போம். எனினும், அது எமக்கு எளிதான செயலன்று. ஏனெனில், இந்த நிலம் எமது புனித சொத்தாகும்.

ஆறுகளும் ஓடைகளும் பாய்ந்தோடும் நீரும் வெறும் நீருற்றல்ல. அவை எம் முன்னோரின் இரத்தமாகும். நாங்கள் எங்கள் நிலங்களை உங்களுக்கு விற்போமாயின், அவை எமக்குத் தூய்மையானவை என்பதை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு விளக்கிக்கூற வேண்டும். எமது நிலத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு நீர்த்துளியும் எம் மக்களின் வாழ்வின் பல்வேறு சம்பவங்களை வெளிப்படுத்தும் நினைவுச் சின்னங்களாகும். அவை எம் மூதாதையரின் குரலொலியாகும். ஆறுகள் எம் சகோதரர்கள். அவை எம் தாகத்தைத் தணிக்கின்றன. எம் பிள்ளைகளைப் போஷிக்கின்றன. ஆறுகள் உங்களதும் சகோதரர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். எனவே, உங்கள் சகோதரருக்குக் காட்டும் அன்பை இவற்றுக்கும் காட்டுவதற்கு மறந்துவிடாதீர்கள்.



தலைவர் சியாட்டலுக்காகக் கட்டப்பட்ட கல்லறைத் தூபி



காலையில் சூரியன் உதிக்கும்போது, மலைகளிலுள்ள பனித்துளிகள் மறைந்து போவது போல, வெள்ளையர்களின் ஆக்கிரமிப்பின் முன் செவ்விந்தியர்கள் எப்போதும் பின்வாங்கினர். அவர்களது மயானங்கள் அவர்களுக்குப் புனிதமாவது போல எமது நிலம் எமக்குப் புனிதமானதாகும். வெள்ளையர்களால் எமது பழக்க வழக்கங்களைப் புரிந்துகொள்ள முடியாது என்பதை நாம் அறிவோம். நிலம் அவர்களுக்கு நண்பரன்று. ஓர் இடத்தை வெற்றிகொண்ட பின்னர், மற்றுமோர் இடத்தை வெற்றிகொள்ள அவர்கள் முன்னோக்கிச் செல்கின்றனர். அவர்கள் தம் முன்னோரின் மயானங்களை எவ்வித கவலையுமின்றி கைவிட்டுச் செல்கின்றனர். நிலத்தைப் பறித்துக்கொள்கின்றனர்.



நீல வானத்தையும் தாயாக விளங்கும் பூமியையும் பணம் கொடுத்து வாங்கும் பொருளாக அவர்கள் எண்ணுகின்றனர். இதனால், அவர்கள் ஒருநாள் இந்த நிலத்தை அழித்துப் பாலைவனமாக மாற்றுவர். வெள்ளையர்கள் அங்கு அமைக்கும் நகரங்கள் எமக்கு வேதனையைத் தரும். செவ்விந்தியர்களாகிய நாங்கள் உங்கள் பழக்கவழக்கங்களை அறியாத மிலேச்சர்களாக இருக்கக்கூடும். அந்நகர்களில் அமைதியான சூழலைக் காண முடியாது. ரீங்காரமிடும் தேனீக்களின் ஓசையைக் கேட்க முடியாது. இதற்குப் பதிலாகப் பாரிய ஓசைகளையே கேட்க முடியும். உயிரினங்களின் இனிமையான ஓசையைக் கேட்க முடியாதவிடத்து, அவ்வாறான சூழலில் வாழ்வதால் என்ன பயன்?

செவ்விந்தியர்களாகிய எமக்கு எமது சுற்றாடலில் இருந்து கிடைக்கும் காற்று மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். ஏனெனில், மரஞ்செடி கொடிகளும் மனிதர்களாகிய நாங்களும் இந்தக் காற்றையே சுவாசிக்கிறோம். ஆனால், வெள்ளையர்கள் இதனை உணர்வதில்லை. எமது முன்னோர் பிறந்தது முதற்கொண்டு இறக்கும்போது விடும் இறுதி மூச்சுவரை இந்த நிலத்துடன் கலந்துள்ளது. நாங்கள் எங்கள் நிலங்களை உங்களுக்கு விலைக்கு விற்போமாயின், நீங்கள் அதனைத் தூய பூமியாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது மலரும் பூக்களிலிருந்து வெளிவரும் வாசனையுடனான காற்றை சுவாசிக்க வெள்ளையர்களாலும் முடியும்.

நிலத்தைப் பணங்கொடுத்து வாங்கும் உங்கள் வேண்டுகோளை நாங்கள் ஏற்போமாயின், நீங்களும் எங்கள் நிபந்தனை ஒன்றை ஏற்க வேண்டும். அதாவது, வெள்ளையர்களாகிய நீங்கள் இப்பூமியில் வாழும் சகல மிருகங்களையும் உங்கள் சகோதரர்களாகக் கருத வேண்டும். ஓடும் புகையிரதத்திலிருந்து வெள்ளையர்கள் துப்பாக்கியால் சுடுவதால், ஆயிரக்கணக்கான காட்டெருமைகள் இறப்பதையும் அவற்றின் உடல்கள் உக்கிச் செல்வதையும் நான் கண்டேன். உயிரற்றவைகளை விட, உயிருள்ள மிருகங்கள் பெறுமதி வாய்ந்தவையாகும். மிருகங்கள் இல்லாத இடத்தில் மனிதனின் நிலை என்ன..? அனைத்து மிருகங்களும் இவ்வுலகிலிருந்து பிரிந்து சென்றால், மனிதன் வேதனையால் மடிந்துவிடுவான். ஏனெனில், மிருகங்களுக்கு ஏற்படும் எல்லா விபத்துக்களும் மனிதனுக்கும் ஏற்படலாம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றும் போற்றப்படும் சியாட்டலின் உரை

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது முன்னோரின் ஜீவியத்தால் இந்நிலம் செழிப்புற்றதென்றும் இந்நிலம் எமது தாய் என்றும் நாம் எமது பிள்ளைகளுக்குக் கூறியுள்ளோம் என்பதை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் இந்நிலத்திற்கு மரியாதை செய்வார்கள். இந்நிலத்தை அசுத்தப்படுத்துபவன் தன்னையே அசுத்தப்படுத்திக்கொள்வதற்கு ஈடாவான். இதனை நாம் அனைவரும் அறிவோம். ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் ஒரே இரத்தத்தை உடையோராய் இருப்பதுபோல் இயற்கையிலுள்ள அனைத்தும் ஒரே உறவால் பிணைந்துள்ளன. பூமியில் உள்ள உயிரினங்கள், மனிதனால் உண்டாக்கப்பட்டவை அல்ல. மனிதனும் படைக்கப்பட்டவனே ஆவான். எனவே, இப்பூமிக்கு மனிதனால் இழைக்கப்படும் தீங்குகள் அனைத்தும் அவனால் தனக்கே விளைவித்துக்கொள்ளப்படும் தீங்காகும். இதனை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

எனினும், உங்களால் எமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாதுகாப்பான நிலத்திற்குப் போவது தொடர்பாக நாங்கள் சிந்தித்துப் பார்ப்போம். அங்கு உங்களிலிருந்து விலகி சமாதானத்தோடும் ஒற்றுமையோடும் வாழக்கூடியதாக இருக்கும். எமது வாழ்வின் எஞ்சிய நாட்களில் எங்கு வாழ்ந்தாலும் பரவாயில்லை. தற்போது சிறு பிரதேசத்திற்குள் ஒடுங்கி இருக்கின்றபோதிலும், அன்று இப்பூமியில் அங்குமிங்கும் அலைந்து திரிந்த பெரும் கோத்திரத்தைச் சேர்ந்த எம் பிள்ளைகள், இன்றைய உங்கள் பிள்ளைகளைப் போன்று பலம்வாய்ந்தவர்களாகவும் எதிர்கால எண்ணங்களால் நிறைந்தவர்களாகவும் இருந்தார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.


எனது மக்கள் இப்பூமியிலிருந்து அழிவுறுவது பற்றி நான் கவலைப்படுவதேன்..? பல்வேறு கோத்திரங்கள் மனிதர்களாலேயே தோற்றம்பெற்றுள்ளன. சமூத்திரத்தில் ஏற்படும் போட்டி அங்கேயே ஆரம்பித்து அங்கேயே முடிவுறும். அவ்வாறே நாமும் பூமியில் தோன்றி மடிகிறோம். எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் நாம் அனைவரும் சகோதரர்கள் ஆவோம். எதிர்காலத்தில் வெள்ளையர்கள் விளங்கிக்கொள்ளும் உண்மை இதுவென நாம் அறிவோம். நாம் ஆராதிக்கும் இறைவன், அவர்களுக்கும் இறைவன் என்பதை ஒருநாள் அவர்கள் விளங்கிக் கொள்வர். தற்போது எமது நிலத்தை சொந்தமாக்கிக்கொள்ள முயல்வது போல இறைவனின் உரிமையையும் சொந்தமாக்கிக் கொள்ள அவர்கள் முயலலாம். இறைவன் அனைவருக்கும் பொதுவானவன். எனவே, இறைவனின் அன்பு வெள்ளை, சிவப்பு இனத்தவர்களுக்கும் ஒரே விதமாகவே பகிரப்படுகிறது. இப்பூமி இறைவனுக்கு மிகவும் பிரியமானது. எனவே, பூமிக்குக் கேடு விளைவிப்போர் பூமியைப் படைத்த இறைவனையே நிந்திக்கின்றனர். என்றாவது ஒருநாள் வெள்ளையர்கள் இப்பூமியிலிருந்து மறைந்துவிடலாம். சிலவேளை ஏனைய கோத்திரத்தார் மறைந்துவிடுவதற்கு முன்னர் இது நடைபெறலாம்.

ஏதோ ஒரு காரணத்தால் உங்களை இப்பூமிக்கு அழைத்து வந்து, செவ்விந்தியர்களை வெற்றிகொண்டு ஆதிக்கத்தைப் பரப்பிட இடமளித்த இறைவனின் வல்லமையால், என்றாவது ஒருநாள் நீங்களும் அழிவுறக்கூடும். மனிதனின் விதி தீர்மானிக்கப்படுவது இன்னும் எமக்குப் பரம ரகசியமாகவே உள்ளது. பனியால் மூடப்பட்ட மலையை எங்கே காணலாம்..? கழுகுகளும் குதிரைகளும் அழிவுற்றன. நாங்கள் உங்கள் வேண்டுகோளுக்கு இணங்குவது, நீங்கள் எமக்கு வழங்குவதாகக் கூறிய பாதுகாப்பு நிலத்தின் பொருட்டேயாகும். அப்போது மிகுதியாக உள்ள குறுகிய நாட்களை நாங்கள் அங்கேயே கழிக்கக்கூடியதாக இருக்கும். இறுதியான செவ்விந்தியன் இப்பூமியிலிருந்து பிரியாவிடை பெறும் நாளில், ப்ரயரிஸ் புல்வெளியூடாக மிதந்து செல்லும் மேகத்தின் நிழலாகும் நாளில், இப்பூமியின் கரையோரப் பகுதிகளிலும் காடுகளிலும் என் மக்களின் ஆன்மா நிலைத்திருக்கும்.

புதிதாகப் பிறந்த குழந்தை தன் தாயின் இதயத் துடிப்பை நேசிப்பது போல, எம் மக்களும் இப்பூமியை நேசிக்கின்றனர். இந்நிலத்தை நாங்கள் விற்போமாயின், எம்மைப் போலவே அதனை நேசியுங்கள். நாங்கள் இப்பூமியைப் பாதுகாப்பது போலவே நீங்களும் இதனைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இதனை விலைகொடுத்து வாங்கும்போது அதன் நிலைப்பாட்டை மனதில் கொள்ளுங்கள். இறைவன் அனைவரையும் ஒரே விதமாக அன்புசெய்வதால் நீங்களும் உங்கள் முழுப் பலத்தோடும் முழு உள்ளத்தோடும் உங்கள் பிள்ளைகளின் பொருட்டு இதனைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

நாங்கள் ஒன்றை அறிவோம். அதாவது, எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஒரே இறைவனே! அவனுக்கு இந்த நிலம் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். வெள்ளையர்கள் எதைக் கூறினாலும், செய்தாலும் நாம் சகோதரர்களாவோம். எதிர்காலத்தில் நிகழப்போவது என்ன? அதை எம்மால் நன்கு பார்க்கக்கூடியதாக இருக்கும்.

**இரஞ்சித் ஜெயகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'எனது நாடு'

## ஜப்பான் குமமோத்தோ UNESCO அமைப்பின்
## சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி 2013

ஏற்பாட்டாளர்: குமமோத்தோ UNESCO நிறுவனம் - ஜப்பான்

பங்குபற்றல்: சிறுவர் கலை அரங்கு Child art Studio- இலங்கை

சித்திரத்தின் தொனிப்பொருள்: எனது நாடு- My Country

சிறுவர்கள் வரையும் சித்திரத்தில் பிரதிபலிக்கப்படும் கலாசாரப் பெறுமதி கொண்ட அனுபவங்களை சர்வதேசப் பிரஜைகளுடன் பரிமாறிக் கொள்வது இந்த போட்டியின் நோக்கமாகும்.

சுற்றாடல் (மனிதர் உட்பட) தொடர்பான உணர்வுபூர்வமான புரிந்துணர்வு கொண்ட தீவிரமான அக்கறையை ஏற்படுத்துவதும், எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கப்படும் இந்த ஈடு இணையற்ற நட்புணர்வின் முக்கியத்துவம் குறித்து உத்வேகத்தை ஏற்படுத்துவதும் இப்போட்டியின் தொனிப் பொருளாக அமைகின்றது.

**நீங்கள் வரையும் சித்திரம்:** அழகிய சுற்றாடலில் நானும் எனது நாடும்/எனது நாட்டைப் பற்றி நான் சிந்திக்கும் விதம்/ மேலும் எனது நாட்டைப் பற்றிய கருத்தினை வெளிப்படுத்தும் விதத்திலும் நீங்கள் விரும்பிய தலைப்பில் சித்திரம் வரையலாம்.

**நாம் எதிர்பார்ப்பது:**

* நவீன முறையில் படைப்புத் திறன் மிக்க தீவிர வெளிப்பாட்டுத் தன்மை கலைத்துவ அடிப்படையில் இருத்தல்.
* வழமையான முறையில் இல்லாமல் புதிய சிந்தனைத் திறனுடன் உங்கள் படைப்பினை பூர்த்தி செய்ய முடியும்.

**ஊடகம்:** சித்திரத்தில் எந்தவொரு வரைதல் ஊடகத்தையும் பயன்படுத்தலாம். கொலாஜ் அல்லது எந்தவொரு கிரஃபிக் ஊடகத்தினாலும் சித்திரம் வரையலாம்.

**உங்களது படைப்பின் நீளம், அகலம்:** 38cm X 54cm

**வயதெல்லை:** 4 முதல் 15 வயதுவரை (2013 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்குள்)

**பரிசும் விருதும்:** ஜப்பானின் குமமோத்தோ நிறுவனத்தின் தலைவர் விருது, சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும்.

**சிறப்பு:** இரண்டாவது இடத்தைப் பெறும் இருவருக்கு பரிசுகள் வழங்கப்படுவதோடு, அதிசிறப்பு விருதுகள் ஒன்பது மற்றும் முப்பத்திரெட்டு பாராட்டு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். நீங்கள் பெறும் வெற்றிக்கு ஏற்ப அந்த சிறப்பு சித்திரங்கள் ஜப்பானின் குமமோத்தோ Unesco 2014 கெலண்டரில் சேர்க்கப்படும். அதன் பிரதிகள் உங்களுக்கு வழங்கப்படும்.

**'எனது நாடு' சிறுவர் சித்திரப்போட்டி - 2013**

போட்டியாளர் பெயர்: ..............................................

Name in Full: ..............................................

(English Capital)

வயது: ..............................................

வீட்டு முகவரி: ..............................................

..............................................

தொலைபேசி இலக்கம்: ..............................................

(போட்டி முடிவை அறிவிக்க)

பாடசாலையின் பெயர்: ..............................................

பாடசாலை முகவரி: ..............................................

மாவட்டம்: ..............................................

இந்த படைப்பு மேற்கூறப்பட்ட போட்டியாளரினுடையது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

..............................................

சித்திரப்பாட ஆசிரியர்/ஆசிரியை

.............................. ..............................

அதிபர் திகதி

**இறுதி திகதி:** சித்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி 2013 ஒக்டோபர் 25. (ஒக்டோபர் 21 முதல் 25 வரை நேரடியாகவும் சித்திரங்களை ஒப்படைக்க முடியும்) சித்திரத்தில் மடிப்பு ஏற்படாதவகையில் பழுதுபடாத வகையிலும் உறையில் இட்டு தபால்மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்க முடியும்.

**சித்திரங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**
(இதில் விரும்பிய முகவரிக்கு அனுப்பலாம்)

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
Child art Studio,
53/7, கிறெகரி வீதி,
கொழும்பு-07

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
27/2, குருதெனிய வீதி,
அம்பிட்டிய.


**மேலதிக விபரங்களுக்கு:** 0714820151
(தினமும் மாலை 7 முதல் 10 வரை)

* இந்த சித்திரப் போட்டியில் அதிசிறப்பு விருதைப் பெறும் மாணவ/மாணவியரது பாடசாலைக்கும் விசேட மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

ஊடக அனுசரணை: விஜய்

# விரல் அளவையில் அளப்போம்!

அடிமட்டம் மற்றும் அளவுப்பட்டி இல்லாமல் வேலைகளைச் செய்ய வேண்டிய நிலமை சிலவேளைகளில் ஏற்படுவதுண்டு. அதன்போது நீளம் அகலத்தை அளக்க முடியாமல் சிரமப்படுவோம்.




ஆனால், இன்று அதற்கு ஒரு வழி கிடைத்துள்ளது.

இங்கு குறிப்பிடப்படும் அளத்தல் முறையைச் சரியாகக் கற்றுக்கொண்டீர்களாயின், மிகச் சரியான முறையில் சிறிய அளவிலான அளத்தல்களை மேற்கொள்ள முடியும். அதன் போது உங்களுக்கு அடிமட்டம் தேவைப்பட மாட்டாது. இதற்கு விரல்கள் மட்டுமே தேவைப்படும். இதோ அந்த விரல்களால் அளக்கும் அளத்தல் முறை.

இந்த அளத்தல் முறை ஒருவருக்கு ஒருவர் மாறுபடக்கூடும். அதனால், இந்த படக்குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எமது விரல்களினால் அளவுகளை அளந்துகொள்ள வேண்டும். இதனை மட்டுமே நீங்கள் செய்ய வேண்டும். ஆனால், இந்த அளவுகளை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இதோ அளக்கும் முறை:

முதல் படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு முதலில் கையின் அகலத்தை அளந்துகொள்ளுங்கள். பொதுவாக வயது வந்தவர்களின் கையின் அகலம் சராசரியாக 10 சென்றி மீற்றராக இருக்கும். சிலவேளைகளில் உங்களது கையின் அகலம் இதனைவிடக் குறைவாகவும் இருக்கக்கூடும். அதனால், சரியாக அளந்து அளவையை எடுத்துக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக 2 ஆவது படக்குறிப் பின்படி, பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையிலான தூரத்தினை நன்கு விரல்களை விரித்து வைத்து அளந்துகொள்ள வேண்டும். பொதுவாக வயதுவந்தவர்களின் நீளம் 18 சென்றிமீற்றராக இருக்கும்.

அடுத்ததாக 3 ஆவது படக்குறிப் பின்படி, கைவிரல்களை ஒன்றிணைத்துக்கொள்ளுங்கள். அதன் நீளத்தையும் அளந்துகொள்ளுங்கள். வயது வந்தவர்களாயின், சராசரியாக நீளம் 10 சென்றி மீற்றர் ஆக இருக்கும்.

நான்காவது படக்குறிப்பில் உள்ளவாறு, நடுவிரலையும் ஆட்காட்டி விரலையும் இயலுமானவரை விரித்து அந்த நீளத்தையும் அளந்துகொள்ளுங்கள். வயதுவந்தவர்களாயின் அந்த நீளம் 5 செ.மீற்றர் ஆக இருக்கும்.

5 ஆவது படக்குறிப்பில் உள்ளவாறு, பெருவிரலுக்கும் சிறுவிரலுக்கும் இடையிலான தூரத்தையும் அளந்துகொள்ளுங்கள். இந்த நீளம் பொதுவாக வயது வந்தவர்களாயின் 19 சென்ரி மீற்றர் ஆக இருக்கும்.

இதனை நாம் உயிர்ப் பரிமாணம் என்று கூறுவோம். இந்த அளவுகளை நீங்கள் சரியாக நினைவில் வைத்துக்கொள்வீர்களாயின், சிறு சிறு அளத்தல்களுக்குக்கூட அடிமட்டம் தேவைப்படமாட்டாது.



# புகாகு (Bugaku)

சீனா, இந்தியா, கொரியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பாரம்பரிய நடனப் பாணிகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட ஒரு



நடனப்பாணியாக புகாகு நடனம் கருதப்படுகின்றது. இந்த நடனத்தினை ஜப்பானின் அரச சபை அரங்குகளில் ஆடிக்காட்டியுள்ளனர். இந்த நடனத்தை வலது நடனம், இடது நடனம் என்று இரு பிரதான பிரிவுகளாகப் பிரிப்பர். சஹா-நோ-மாயி என்பது இடது நடனமாகும். இதற்கெனச் சீன இசை பயன்படுத்தப் படுகின்றது.

நடனம் ஆடுபவர்கள் சிவப்பு நிற ஆடையில் தம்மை அலங்கரித்துக்கொண்டு சஹோ-நோ-மாயி நடனத்தை ஆடினர். வலது நடனமான உஷோ-நோ-மாயி நடனத்தில் கொரிய இசை இசைக்கப்பட்டது. இந்த நடனத்தினை நீலம் மற்றும் பச்சை நிற ஆடைகளை அணிந்துகொண்டே ஆடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் ஒரு பாடத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவது ஏன்?


அங். இல: 5356
ஜெ.கவிப்பிரியா,
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.


அங். இல: 5357
ஐ.அனுஜ்காந்,
சென்கூம்ஸ் தோட்டம்,
தலவாக்கலை.


அங். இல: 5358
ஜீ.மதுஷாயினி,
இறம்பைக்குளம்,
வவுனியா.


அங். இல: 5359
என்.இர்ஃபாட் அஹமட்,
தெனிபிட்டிய,
வெலிகம.

## விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5360
சி.உமாசுதன்,
புதுக்குடியிருப்பு,
மன்னார்.


அங். இல: 5361
எம்.நஸ்லான்,
தளுவகட்டுவ,
கொச்சிக்கடை.


அங். இல: 5362
மு.றி.நூறா,
ஊர் வீதி,
காத்தான்குடி-04.


அங். இல: 5363
ஜே.கெவின் லெம்பேட்,
வங்காலை,
மன்னார்.


அங். இல: 5364
வி.கோகுலன்,
திருவள்ளுவர் வீதி,
உக்குளங்குளம்.


அங். இல: 5365
கி.சிறிகரன்,
வரோதய நகர்,
திருகோணமலை.


அங். இல: 5366
எஸ்.சர்மிளன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.



அங். இல: 5367
தா.தஸ்னி சிரோஸ்,
ஆஸ்பத்திரி வீதி,
சாய்ந்தமருது-07.



மனிதனின் நுண்ணறிவு பல கூறுகளால் ஆக்கப்பட்டது. நுண்ணறிவைப் பற்றிய உளவியல் கோட்பாடு ஒன்றின்படி, நம் அனைவரினது நுண்ணறிவும் இரண்டு கூறுகளால் ஆக்கப்பட்டது எனக் கொள்ளப்படுகிறது. வாழ்வதற்குத் தேவையான அடிப்படை அறிவை வழங்கும் பொதுக் காரணி ஒன்றும், ஏதேனும் ஒரு சிறப்புத் தன்மைக்குக் காரணமான சிறப்புக் காரணி ஒன்றும் நம் நுண்ணறிவில் உள்ளது. இதன்படி, பாடசாலை சென்று படிப்பதற்குப் பொது நுண்ணறிவுக் காரணியும் அத்துடன், ஏதோ ஒரு பாடத்தில் சிறந்து விளங்கக் காரணமாக சிறப்புக் காரணியும் அனைத்து மாணவர்களுக்கும் இருக்கும். அதன் காரணமாகவே அனைத்துப் பாடங்களையும் கற்பதோடு கணிதம், அறிவியல் அல்லது மொழிப்பாடம் என ஏதோ ஒன்றில் மாணவர்கள் அதிக ஆர்வமும் தனித்திறமையும் பெற்று விளங்குகிறார்கள். சில மாணவர்கள் எந்தப் பாடத்திலும் ஆர்வமில்லாமல் ஓவியம், இசை, நடனம், சமூக சேவை என வேறு ஏதேனும் விஷயங்களில் ஆர்வம் கொண்டிருக்கலாம்.



மாணவர்களின் ஆர்வத்தைக் கண்டறிய உளவியல் நாட்டச் சோதனைகள் பல உருவாக்கப்பட்டுள்ளன.



இந்நாட்டச் சோதனைகள் மாணவர்கள் என்ன துறையில் அல்லது எந்தப் பாடத்தில் ஆர்வம் உள்ளவர்களாக விளங்குகிறார்கள் என்பதைக் கண்டறியும் திறன் படைத்தவை.


சிலர் நிறையப் பேசும் இயல்பு கொண்டவர்களாக இருப்பர். பேசாமல் இருக்கச் சொன்னால் அவ்வாறிருக்க அவர்களால் முடியாது. அதைப் போன்றே பேசாமல் அமைதியாக இருக்கும் சுபாவம் கொண்டவர்களைக் கலகலவெனப் பேசக் கட்டாயப்படுத்தினால், அது அவர்களால் முடியாது.

தற்போது பெற்றோர்கள் நாட்டில் என்ன துறையை எல்லோரும் தேர்ந்தெடுத்துப் படித்தார்களோ அதே துறையைத் தம் குழந்தைகளையும் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகிறார்கள். அவ்வாறு கட்டாயப்படுத்துவது முட்டாள்தனம். எந்தத் துறையைச் சார்ந்த படிப்பைத் தேர்ந்தெடுத்துப் படித்தாலும் அதில் முன்னேற வாய்ப்புகள் உள்ளன. அதைப் புரிந்துகொள்ளாமல் ஆர்வமில்லாக் குழந்தையைக் குறிப்பிட்ட பாடப் பிரிவில் சேர்த்துவிட்டாலும், அவர்களால் அதில் வெற்றிபெற முடியாது.

(தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

## தெரிந்து கொள்வோம்




- 2013 நொவெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள 'பொதுநலவாய' மாநாட்டில் 54 நாடுகள் கலந்துகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுநலவாய நாடுகளின் தலைமையகம் எங்கே அமைந்துள்ளது?
  லண்டனில்



- ஐக்கிய நாடுகள் சபையின் தந்தையென அழைக்கப்படுபவர் யார்?
  ஐக்கிய அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்



- கெனடா சமஷ்டிய மைப்பிலிருந்து பிரிந்துசெல்ல வேண்டுமென ஒரு மாநிலம் கோரிக்கை விடுத்தவண்ணமுள்ளது. அது எந்த மாநிலம்?
  க்யூபெக் மாநிலம்
- ஆபிரிக்கக் கண்டத்தில் ஆகக்கூடிய நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி செய்த ஐரோப்பிய நாடு எது?
  பிரான்ஸ்



- சீனாவில் பொதுவுடமை ஆட்சியை ஸ்தாபித்த 'மா சேதுங்' எப்போது காலமானார்?
  1976.09.09 இல்
- பாலின் அடர்த்தியை அளக்கப் பயன்படும் அளவீடு யாது?
  லக்டோ மீற்றர்



- சந்திரனில் இறங்குவதற்காகச் சென்ற விண்கலமொன்று சந்திரனுக்கு மிக அருகில் சென்று சந்திரனில் இறங்காமல் திரும்பிவந்தது. அந்த விண்கலம் யாது?
  அப்பலோ -14

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Dialog தொலைபேசியில் ஆங்கிலம் மூலம் SMS ஊடாக

- தினமும் அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகள், IT Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்)
- ஆங்கில Proverb, Idiom மற்றும் Quote களை தினமும் பெறலாம்.
- முக்கிய செய்திகள், பொது அறிவு, புதிய கண்டுபிடிப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக்கொள்ளவும்.




படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் கீழேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
..................................................
பாடசாலை: ..................................................
வகுப்பு: ..................................................
திகதி: ..................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியாகும் twitter பதிவுகள் தாமாகவே Delete ஆக ஒரு புதிய சேவை!

Twitter சேவையின் சிறப்பே அதன் உடனடித்தன்மைதான். எதைப்பற்றியும் Twitter இல் உடனுக்குடன் குறும்பதி விடலாம். நிகழ்ச்சி நடக்கும்போது அது தொடர்பான கருத்துக்களை வெளியிடும் இந்தச் சூடான தன்மை உற்சாகத்தைத் தரும்.




நமது Twitter கால வரிசையில் திரும்பிப் பார்த்தால், சில குறும்பதிவுகள் அவற்றின் காலம் முடிந்துபோய் வெற்றுப்பதிவாகக் காட்சி தரலாம். உதாரணமாக: குறிப்பிட்ட இணையத்தளம் ஒன்றில் கிடைத்த புதிய திரைப்பட வரவு பற்றிய தகவலை நீங்கள் பகிர்ந்திருக்கலாம். அப்போது அது பலராலும் வாசிக்கப்படும். ஆனால், இப்போது இந்தத் திரைப்படமே வெளிவந்து ஓடி முடிந்த பிறகு இந்தத் திரைப்படம் வெளிவர இருக்கிறது' என்ற அந்தக் குறும்பதிவு எதற்கு? என்று உங்களுக்குத் தோன்றியிருக்கலாம்.

ஆக, இதுபோன்ற காலவரையறை கொண்ட குறும்பதிவுகளை அவற்றின் பயன்பாட்டுக் காலம் முடிந்த பிறகு, அவை தானாகவே Delete செய்யப்பட்டுவிடும் வசதி இணையத்தில் இருக்கிறது. twitterspirit.com என்ற இணையத் தளமே இந்த வசதியைத் தருகிறது.

Twitter நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான பியரி லெக்ரெய்ன் என்பவரே, இந்தச் சேவையை உருவாக்கியுள்ளார். இந்தச் சேவை ஒரு hashtag மூலம் குறும்பதிவுகள் தானாக Delete ஆக வழி செய்கிறது.

எந்தக் குறும்பதிவுகள் எல்லாம் காலவரையறை கொண்டவையோ, அவற்றுடன் அந்தக் காலவரையறையை hashtag காகக் குறிப்பிட்டால் போதும். அந்தக் காலம் முடிந்தவுடன் அவை காணாமல் போய்விடும்.







உதாரணமாக: ஒரு குறும்பதிவுடன் #4d என்று குறிப்பிட்டால், அந்தப் பதிவு 4 நாட்கள் முடிந்தவுடன் Delete ஆகிவிடும். இதேபோல மணிக் கணக்கையோ நிமிடக் கணக்கையோகூடக் குறிப்பிடலாம்.

நீங்களும் முயற்சித்துப் பாருங்கள். இந்த இணையத்தள முகவரியில் சென்று Enable Spirit என்பதைக் க்ளிக் செய்து, உங்கள் Twitter கணக்கினை http://twitterspirit.com/ எனும் இந்த இணையத்துடன் இணைத்துக்கொள்ளுங்கள். அதன்பின்னர் இந்த Spirit சேவையை நீங்கள் உபயோகித்துக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# சிறுவர்களுக்கான Android கைக்கணினி

சிறுவர்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையிலான கைக்கணினியொன்றை Toys R Us எனும் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை அறிமுகப்படுத்தியுள்ள சிறுவர்களுக்கான கைக் கணினிகளில், இது அளவில் சற்றுப் பெரிய கைக்கணினியாகும்.




'Tabeo e2' என அழைக்கப்படும் இந்தக் கைக்கணினி (Tablet) ஆனது, 8 அங்குல தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 1.0GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Dual-Core Processor மற்றும் பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. Android 4.2 Jelly Bean இயங்குதளத்தினைக் கொண்டுள்ளதுடன், சேமிப்பு நினைவகமாக 8GB கொள்ளளவு தரப்பட்டுள்ளது.

நீலம், இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை எனும் மூன்று நிறங்களில், ஆறு வயது தொடக்கம் 11 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகள் பயன்படுத்தக்கூடிய வகையில் அறிமுகமாகும் இந்த கைக் கணினி, பெற்றோர்கள் கட்டுப்படுத்தக் கூடியதும் கல்விசார்ந்ததுமான எப்ளிகேஷன்கள் உட்பட, மேலும் பல வசதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இதன் விலை 150 டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




இங்கே மடிக்கவும்
இங்கே வெட்டவும்
Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

Android ஃபோன்கள் மற்றும் Tab களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், Android பயனாளர்கள் பலரதும் கேள்விகளாக அதில் எப்படித் தமிழில் எழுதுவது?, அதற்கான சிறந்த மென்பொருள் எது? என்பன அமைந்துள் ளன. ஆகவே, இயங்குதளத்தில் தமிழில் எழுத




# தமிழில் எழுத சிறந்த Android Application




இரண்டு மென்பொருட் களை இவர்களுக்காக இங்கே தருகிறோம்.

**Sellinam:**

மிக எளிதாக எழுதும் வண்ணம் உருவாக்கப் பட்டுள்ள இந்த Applicationஇல்,கீபோர்ட் ஆனது, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் உள்ளது. தமிழ் மொழி கீபோர்ட்டைப் பயன்படுத்தி எழுத விரும்புபவர்களுக் கான உகந்த Application இதுதான். இதில், தமிழில் எழுதும் அதே நேரத்தில், உடனே ஆங்கிலத்துக்கு மாற, இடது கீழ் மூலையில் உள்ள 'K/j' என்பதை க்ளிக் செய்தால் போதும். அதேபோலத்தான் தமி ழுக்கும். அவ்வாறே, குறிப்பிட்ட வார்த்தையை முடிக்கும் முன்பே Dictionary மூலம் அந்த வார்த்தை Suggestion ஆக வருவது இதன் ஒரு சிறப்பம்சம் ஆகும். இந்த Application ஐத் தரவிறக்க இந்த இணைய முகவரியைப் பயன்படுத்துங்கள்: https://play.google.com/store/apps/details?id=com.murasu.sellinam

## UKeyboard




**UKeyboard:**

Sellinam போலவே உள்ள இன்னொரு மாற்று கீபோர்ட் இதுவாகும். தமிழில் மட்டு மின்றி இன்னும் 21 மொழிகளில் எழுதும் வசதி இதில் உள்ளது என்பது இதன் சிறப்பம்சமாகும். தமிழில் எழுத வேண்டும் என்று நினைப் பவர்களுக்குக் குறிப்பாக, Google Tamil Transliteration ஐப் பயன்படுத்திக் கணினியில் தமிழில் எழுதுபவர்களுக்கு உகந்த Application ஆக இதனைக் குறிப்பிடலாம். இதிலும் குறிப் பிட்ட வார்த்தையை முடிக்கும் முன்பே Dictionary மூலம் அந்த வார்த்தை Suggestion ஆக வருகிறது. மீண்டும் ஆங்கிலத்தில் எழுத நீங்கள் Input Method ஐத் தான் மாற்றவேண்டும். இதன் ஒரு குறை, சில சமயம் ஆங்கிலத்தில் எழுதுவது தமிழுக்கு மாறுவது இல்லை. இதனைத் தரவிறக்க http://play.google.com/store/apps/details?id=com.ukey.translitoral எனும் இந்த இணைய முகவரியைப் பயன்படுத்துங்கள்.





# ஜப்பான் வழங்கவிருக்கும் அதிவேக தரவுப் பரிமாற்ற இணைய இணைப்பு



உலகில் சிறந்த தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைக் கொண்ட நாடாக ஜப்பான் விளங்குகின்றது. இங்கு விரைவில் 220 Mbps வேகத்தினைக் கொண்ட தரவுப் பரிமாற்றத்துடன்கூடிய இணைய

KDDI

இணைப்பு வழங்கப்படவுள்ளது.

KDDI எனும் நிறுவனத்தினால், 2014 ஆம் ஆண்டின் கோடை காலப்பகுதியில் இந்த அதிவேக நுட்பம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இச்சேவையானது, தற்போது உள்ள வேகத்தினைவிடவும் 32 சதவீதம் அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த அதிவேக தரவுப் பரிமாற்ற நுட்பமானது, புதியதொரு Android கைத்தொலைபேசியுடன் இணைந்ததாக அறிமுகப்படுத்தப்பட வுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்

13

# Windows 8 இயங்குதளத்திற்கான Firefox 26 இணைய உலாவி

Windows 8 இயங்குதளத்தின் Metro Interface திரையில் இயங்கக்கூடிய Firefox 26 இணைய உலாவித் தொகுப்பு எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி வெளிவரவிருக்கிறது. இந்த, Firefox 26 இணைய உலாவித் தொகுப்பு, கடந்த ஓர் ஆண்டாக வடிவமைக்கப்பட்டுத் தயாராக

இதற்கிடையே, Mozilla நிறுவனம் Android இயக்கத்தில் தொடு உணர் தொழில்நுட்பத்தில் இயங்கும் Firefox இணைய உலாவியை வடிவமைத்து வழங்கியது. அதேநேரத்தில், Smartphone களுக்கான இயங்குதளம் ஒன்றையும் Mozilla வடிவமைத்தது. எனவே, இந்த



அனுபவத்தின் அடிப்படையில் Windows 8 க்கான இணைய உலாவியையும் வடிவமைத்து, எதிர்வரும் டிசம்பரில் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது Mozilla.

ஏற்கனவே, Microsoft தன் Windows 8 இயங்குதளத்துடன், Metro Internet Explorer இணைய



இருந்தது. ஆனாலும், Windows 8 விற்பனைக்கு வந்த பின்னரும் Mozilla நிறுவனம் இதனை வெளியிடவில்லை. இப்போது Windows 8.1 வெளிவந்த பின்னர் இது வாடிக்கையாளருக்குக் கிடைக்கவிருக்கிறது.

வருங்காலத்தில் தொடு உணர் திரை இயக்கம்தான் அனைவரும் பயன்படுத்தும் செயல்பாடாக இருக்கும் என Microsoft நிறுவனம் உறுதியாகக் கூறிவந்தாலும், அதன் Windows 8 இதனை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், டிஜிட்டல் உலகில் Android மற்றும் iPad சாதனங்களில்தான் அதிகமாகத் தொடு உணர் திரை இயக்கங்கள் இருந்து வந்தன.



உலாவியையும் வழங்கிவருகிறது. Google நிறுவனமும் தன் Chrome இணைய உலாவியைத் தயாரித்துக்கொடுத்துள்ளது. இப்போது Firefox 26 ஆனது, Metro பதிப்பாக வர இருக்கிறது. ஆக, Windows 8 இயங்குதளத்தில் பயன்பாட்டுக்கு வரும் இணைய உலாவிகளில் எது பாவனையாளர்களைக் கவர்ந்து வெற்றிபெறப்போவது எது என்ற கேள்வி பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.







# குறைந்த விலையிலான மடிக்கணினிகள்


முன்னணி கணினி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான HP நிறுவனமானது, குறைந்த விலையுடைய 'Chromebook [14]' எனும் புத்தம் புதிய மடிக்கணினிகளை அறிமுகம் செய்யவுள்ளது. 14 அங்குல திரையையும் 16GB SSD சேமிப்பு நினைவகத்தினையும் கொண்டுள்ள இந்த மடிக்கணினிகள், விரைவானதும் இலகுவானதுமான இணையப் பாவனையை உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றுடன் Gmail, YouTube, Google Drive மற்றும் Google+ Hangout போன்ற எப்ளிக்கேஷன்களையும் இந்தக் கணினிகள் கொண்டுள்ளன. 299.99 டொலர்களிலிருந்து இதன் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக HP அறிவித்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே மடிக்கவும்








# இணையத்தில் உலா வரும்போது உங்கள் தனிப்பட்ட தகவல்கள் திருடப்படலாம்!

இணையத்தில் இணையும் ஒவ்வொரு டிஜிட்டல் சாதனத்திற்கும் அதனை அடையாளம் காட்டும் வகையில் 'IP Address' (Internet Protocol Address) தரப்படுகிறது. இது உங்களுக்கு மட்டுமேயான நிலையான முகவரியாக இருக்கலாம். அல்லது அவ்வப்போது மாறும் வகையிலான முகவரியாகவும் இருக்கலாம். ஒவ்வொரு முறை நீங்கள் இணையத்தில் இணைகையிலும் இந்த முகவரி மாற்றிக்கொடுக்கப்படும்.

இந்த முகவரி இருந்தால்தான், ஒரு Web Server தன்னிடம் உள்ள இணையப் பக்கத்தினை உங்கள் விருப்பத்தின்பேரில் உங்கள் கணினிக்கு அனுப்ப முடியும். இந்த முகவரியினை வைத்து, உங்களுடைய தனிப்பட்ட தனிநபர் தகவல்களைப் பெற முடியாது என்றாலும் உங்களுக்கு இணைய சேவை வழங்கும்




நிறுவனத்தினால் உங்கள் IP Address உடன் உங்கள் பெயர், முகவரி, கிரெடிட் கார்ட் எண் போன்ற தனிப்பட்ட தகவல்களைத் திரட்ட இயலும். ஆனாலும், ஒவ்வொரு இணைய சேவை நிறுவனமும் தங்களுக்கெனத் தங்கள் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு குறித்த கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஆகவே, உங்கள் தனிப்பட்ட தகவல்களை அவை தெரிந்துகொண்டாலும் அவற்றை



வெளியிடாது.

உங்களுடைய இணைய நடவடிக்கைகளைக் கண்டறிவதற்காக எழுதப்பட்டு, உங்கள் கணினிகளில் பதிக்கப்படுபவையே 'Cookies எனப்படும் கோப்புக்கள் ஆகும். இணையத்தளம் ஒன்றை நீங்கள் பார்வையிடுகையில், அந்தத் தளத்தால் இவை உங்கள் கணினிகளில் பதியப்படுகின்றன. இதன்மூலம் உங்கள் Log in தகவல்கள், உங்கள் தேடல்கள், நீங்கள் வாங்கும் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட விபரங்கள் ஆகியவற்றை தளத்தை நிர்வகிப்பவர்களுக்கு இந்த Cookie பைல்கள் அனுப்புகின்றன.

நீங்கள் செல்லும் இணையத் தளங்களினால் பதியப்படும் Cookie பைல்கள், 'First Party Cookies' என அழைக்கப்படுகின்றன.

சில விளம்பர நிறுவனங்கள் இந்தத் தளங்களை நடத்துபவர்களிடம் ஒப்பந்தம் மேற்கொண்டு, இந்தத் தகவல்களைப் பெற்று, பின் அவர்களின் வர்த்தக நோக்கில் இவற்றைப் பயன்படுத்துகின்றன.

இத்தகைய Cookie பைல்களை 'Third Party Cookies' என அழைக்கின்றனர்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தினை மீறி, சில நிறுவனங்கள் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துகையில்தான் எமக்குப் பிரச்சினைகள் எழுகின்றன.


இது தவிர, தேடல்கள் வழியாகவும் நம்மைப் பற்றிய தகவல்கள் மற்றவர்களுக்கு கைமாறுகின்றன. அதாவது, ஒருவரின் IP முகவரியிலிருந்து வரும் தேடல்களின் அடிப்படையில், அவர் குறித்த தகவல்களை தேடல் எஞ்சின்களை இயக்கும் தளங்கள் அறிந்துகொள்கின்றன. பின்னர், அவற்றை அவையே பயன்படுத்துகின்றன. அல்லது மற்றவர்களுக்கு அளிக்கின்றன. இவற்றுக்கு அடுத்தபடியாக நம்மைப் பற்றிய தகவல்களை வெளிக்காட்டுபவை நம் மின்னஞ்சல்களைக் கையாளும் Server களாகும். இணையத்தளங்கள் வழங்கும்



மின்னஞ்சல் சேவைகளை (Gmail, Yahoo போன்றவை) நாம் பயன்படுத்தினால், அந்த மின்னஞ்சல்களிலிருந்து இவை நம்மைப் பற்றிய தகவல்களைத் திரட்டி வைக்கின்றன. இவற்றைக் கைப்பற்றும் Hacker கள் நம்முடைய ஆர்வத்தின் அடிப்படையில் Spam மெயில்களை அனுப்ப முடியும். அத்துடன், நீங்கள் இணையவெளியில் என்னவெல்லாம் தேடுகிறீர்கள் என்பதனை உங்கள் கணினியில் பதிவாகும் Web History யிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அதன்படி, உங்கள் கணினியை இயக்கும் வாய்ப்புப் பெறும் எவரும் இவற்றை அறிந்துகொள்ளலாம்.

ஆகவே, இவ்வளவு வழிகளில் நம் தனிப்பட்ட தகவல்கள் வெளியே போகும் வாய்ப்புகள் இருப்பதைப் பார்க்கையில், 'இணையத்தின் பக்கமே போக வேண்டாம்' என நீங்கள் ஒரு கணம் எண்ணலாம். ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஓரளவுக்குத் தீர்வுகளும் இருக்கவே செய்கின்றன.

இணையத்தில் உலாச் சென்று வந்தவுடன், Cookie பைல்களை அழிப்பது, Web History யில் எமது தகவல்களைப் பதியவிடாமல் இணையத்தில் இயங்குவது போன்றவை இதற்கான சில தீர்வுகளாகும். நீங்கள் யாரென அறியப்படாமலேயே இணையத்தில் உலாவருவதற்கும் 'Anonymous Web Surfing' போன்ற வழிகளும் உள்ளன.




பாதுகாப்பான முறையில் இணையத்தைப் பயன்படுத்த Shop-Shield மற்றும் Anonymizer போன்ற மென்பொருட்களின் சேவைகள் நமக்குக் கிடைக்கின்றன. இவை ஒவ்வொரு முறையும் நமக்கெனத் தற்காலிக மின்னஞ்சல் முகவரிகளைத் தருகின்றன. User Name மற்றும் Password களையும் வழங்குகின்றன.

பாதுகாப்பாக இயங்குவதற்கான பல வழிகளை இணையத்திலேயே தேடிக் காணலாம். உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்தும்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உருக்களில் வித்தியாசமான உருவைக் காண்க.








இடை வெளிகளை நிரப்புக.

## தனிகரம்




புள்ளிகளை இணைத்து உருவைக் கண்டறிந்து, நிறந்தீட்டுக.



கொடுக்கப் பட்டுள்ள நிறங்களுக்கேற்ப உருவிற்கு நிறந்தீட்டுக.

# மக்கள் தொடர்பாடல்

ஒரு செய்தியை ஒருபாதை வழியாகச் செலுத்தத் தகுதியுள்ள சமிக்ஞையாக மாற்றும் பௌதீக தொழில்நுட்ப செயல் முறையே சாதனமாகும். வெகுசன ஊடகம் என்பது ஒரு கருத்தை அல்லது தகவலை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பரிமாற்றவும், தகவலாளரையும் பெறுநரையும் தொடர்புபடுத்தும் கருவி அதாவது பெரும் மக்கள் திரள்நிலைகளிடையே தகவலை வழங்கப் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களைக் குறிக்கின்றது. குழுத் தொடர்பில் உங்கள் முன்னாலுள்ள குழுவுடன் எறிவைசார், எறிவைசாராக் கருவிகளைப் பயன்படுத்தித் தொடர்பாடலில்




ஈடுபடமுடியும். உங்களுக்கு முன்னால் இல்லாத பெருந்தொகை மக்கள் கூட்டத்துடன் கருத்துக்களை பரிமாறுவதற்கும், தொடர்புகளைப் கட்டியெழுப்புவதற்கும் கம்பியில்லாத தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவைகள் உள்ளன.

மக்கள் தொடர்பியல் எண்ணக்கரு மிகப்பெரிய அளவிலான,வேறுபட்ட பண்பாடு, நோக்கம், எதிர்பார்ப்பு, இனம், மொழி ஆகியவற்றை உள்ளடக்கிய பெருந்தொகை மக்கள் கூட்டத்திற்கு ஒரே நேரத்தில் தகவல்கள் சென்றடையக்கூடிய வகையில் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்பாடல் செயன்முறையைக் குறிக்கின்றது. வெகுசனத் தொடர்பு ஏனைய தொடர்பாடல் வகையிலிருந்து வேறுபட்ட தன்மையினைக் கொண்டமைந்தது. முறைசார் ஒழுங்கமைப்பு அடிப்படையில் நிறுவன ரீதியில் பலரது பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படுவது. பொதுவாக இத்தொடர்பு வகையானது, பொதுமக்களை முதன்மைப்படுத்தியதாகத் திரட்டு அடிப்படையிலும், பண்பு அடிப்படையிலும் தொடர்புபட்டதாக அமைகின்றது.

வெகுசன தொடர்பாடலுக்காக மக்கள் வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்துவதுடன், வெகுசன ஊடகங்கள் இன்றி வெகுசன தொடர்பாடல் இடம்பெற முடியாது என்ற தத்துவ அடிப்படையைக் கொண்டமைந்தது. வெகுசன தொடர்பாடலுக்காகப் பயன்படுத்துகின்ற சாதனங்களாக அச்சு ஊடகமான பத்திரிகை, இலத்திரனியல் ஊடகமான வானொலி, தொலைக்காட்சி, நவீன ஊடகங்களான இணையம் அத்துடன்,




இணைந்த சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பத்திரிகை நுகர்வுக்கு எழுத்தறிவும், வானொலிக்குச்




செவிப்புலத் திறனும், தொலைக்காட்சி, இணைய பாவனைக்குக் கேட்டல், பார்த்தல் ஆற்றல்கள் அவசியமாகின்றன.

## வெகுசன ஊடக வகைகள்

வெகுசன ஊடகங்களை அச்சு, இலத்திரனியல், நவீன ஊடகம் எனப் பொதுவாக வகைப்படுத்திக்கொள்ள முடியும். காலம், காலச்செல்வாக்கு, பங்கேற்போர், தொழில்நுட்பம், புலப்பாடு என்ற அடிப்படையில்



முன்னிலைப்படுத்தும் சாதனங்கள் (Representational Media) மீள் நோக்கு சாதனங்கள், இயந்திர சாதனங்கள் (Mechanical Media) என்ற அடிப்படையிலும், அச்சு ஊடகம் (Print Media), இலத்திரனி யல் ஊடகம் (Electronic Media), நவீன ஊடகம் (New Media) என பிறிதொரு வகைப்பாட்டு அடிப்படையிலும் பாகுபடுத்திக் கொள்ள முடிகின்றது.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் உறவினர்களுக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා:** **පුතා, අද සමන් මල්ලි එනවාද?**
புதா, அத சமன் மல்லி எனவாத?
அம்மா: **மகன், இன்று சமன் தம்பி வருவானா?**

**කමල්:** **ඔව්, නැන්දා ගෙනත් අරිනවා කිව්වා.**
ஒவ், நெந்தா கெனத் அரினவா கிவ்வா.
கமல்: **ஆம், மாமி கொண்டுவந்துவிடுவதாகச் சொன்னார்.**

**අම්මා:** **ආ.. අර කියනකොටම එන්නේ. එන්න.. එන්න නංගි.**
ஆ... அர கியனகொடம என்னே. என்ன... என்ன நங்கி.
அம்மா: **ஆ... அதோ சொல்லும்போதே வருகிறார்கள். வாங்க... வாங்க தங்கச்சி.**

**කමල්:** **අපි බලාගෙන හිටියේ නැන්දලා එනකම්.**
அப்பி பலாகென ஹிட்டியே நெந்தலா எனகம்.
கமல்: **நாங்கள் மாமி வரும்வரை பார்த்துக்கொண்டிருந்தோம்.**

**නැන්දා:** **දවස් කීයක් ඉන්නවාද අක්කේ?**
தவஸ் கீயக் இன்னவாத அக்கே?
மாமி: **எத்தனை நாட்கள் இருக்கிறீர்கள் அக்கா?**

**අම්මා:** **අපි දවස් දෙකක් ඉඳල එනවා.**
அப்பி தவஸ் தெகக் இந்தல எனவா.
அம்மா: **நாங்கள் இரண்டு நாட்கள் இருந்துவிட்டு வருவோம்.**

**නැන්දා:** **පුතා කියපු දවසේ ඉඳල ලැහැස්ති වෙනවා.**
புதா கியப்பு தவசே இந்தல லெஹெஸ்தி வெனவா.
மாமி: **மகன் சொன்ன நாளிலிருந்தே ஆயத்தமாகிறான்.**

**පුතා පරෙස්සමෙන්. අක්කේ, මම ගිහින් එන්නම්.**
புதா பரெஸ்ஸமென். அக்கே, மம கிஹின் என்னம்.
**மகன் கவனமாக. அக்கா, நான் போய் வருகிறேன்.**

**අම්මා:** **නංගි, ඉඳලා දවල්ට කෑම කාලා යන්න.**
நங்கி, இந்தலா தவல்ட கேம காலா யன்ன.
அம்மா: **தங்கச்சி, இருந்து பகல் உணவு சாப்பிட்டுவிட்டுப் போங்கள்.**

**නැන්දා:** **නැහැ අක්කේ, මට බැංකුවට යන්නත් තියනවා.**
நெஹெ அக்கே, மட்ட பெங்குவட்ட யன்னத் தியனவா.
மாமி: **இல்லை அக்கா, நான் வங்கிக்குப் போகவேண்டியும் இருக்கிறது.**

**අම්මා:** **සමන් පුතා, මෙන්න අම්මා යන්න යනවා.**
சமன் புதா, மென்ன அம்மா யன்ன யனவா.
அம்மா: **சமன் மகன், இதோ அம்மா போகப் போகிறார்.**

**සමන්:** **දෙවි පිහිටයි අම්මේ.**
தெவி பிஹிட்டய் அம்மே.
சமன்: **கடவுள் துணை அம்மா.**

**නැන්දා:** **දෙවි පිහිටයි පුතේ, පරෙස්සමෙන්.**
தெவி பிஹிட்டய் புதே, பரெஸ்ஸமென்.
மாமி: **கடவுள் துணை மகன், கவனமாக.**

### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக**

1. සමන් .................. එනවාද?
2. .................. යන්නත් තියනවා.
3. දෙවි .................. අම්මේ.




**Did** எனும் இறந்தகால துணை வினைச்சொல் (Past Tense Auxiliary Verb), எதிர்மறை வாக்கியங்களில்,உதவிபுரியும் வினைச்சொல்லாக (Helping Verb) கையாளப்படும் முறை பற்றி, மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்.

(அ) நான் எனது தேநீரைக் குடித்தேன்.
I drank my tea.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) நான் எனது தேநீரைக் குடிக்கவில்லை.
I did not drink my tea.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** drank- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
drink- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

- I drank. (Affirmative)
  நான் குடித்தேன். (உடன்பாடு)
- I didn't drink. (Negative)
  நான் குடிக்கவில்லை. (எதிர்மறை)

(இ) நீ உனது பணத்தை நேற்றுச் செலுத்தினாய்.
You paid your money yesterday.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) நீ உனது பணத்தை நேற்றுச் செலுத்தவில்லை.
You did not pay your money yesterday.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** paid- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
pay- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

- You paid. (Affirmative)
  நீ செலுத்தினாய். (உடன்பாடு)
- You didn't pay. (Negative)
  நீ செலுத்தவில்லை. (எதிர்மறை)

(உ) நாங்கள் அவர்களுக்கு கொஞ்சம் இனிப்புகள் கொடுத்தோம்.
We gave them some sweets.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) நாங்கள் அவர்களுக்கு எதனையும் கொடுக்கவில்லை.
We did not give them anything.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** gave- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
give- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

- We gave. (Affirmative)
  நாங்கள் கொடுத்தோம். (உடன்பாடு)
- We didn't give. (Negative)
  நாங்கள் கொடுக்கவில்லை. (எதிர்மறை)

(எ) அவர்கள் அந்த யன்னலை உடைத்தனர்.
They broke the window.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) அவர்கள் அந்த யன்னலை உடைக்கவில்லை.
They did not break the window.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** broke- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
break- நிகழ்கால வினைச்சொல்(Present Tense Verb)

- They broke. (Affirmative)
  அவர்கள் உடைத்தனர். (உடன்பாடு)
- They didn't break. (Negative)
  அவர்கள் உடைக்கவில்லை. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடாளுமன்ற விவாதங்கள் உள்ளடங்கிய ‘ஹன்சாட் அறிக்கை’

ஆட்சி அரசியலை அடிப்படையாகக்கொண்ட ஜனநாயக ஆட்சி முறை நிலவும் சகல நாடுகளிலும் ‘ஹன்சாட் அறிக்கை’ எனப்படும் நாடாளுமன்ற விவாதங்கள் உள்ளடங்கிய நூல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு ஏற்ப நடைபெறும் நாடாளுமன்ற கூட்ட அமர்வின்போது நடைபெறும் சகல விடயங்கள், சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், விபரங்கள், தொடர்பிலான விவாதத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் உரைகள் என்பன மட்டுமன்றி, சூடான விவாதங்கள், சர்ச்சைகள் அமளிதுமளிகள் அனைத்தும் ஹன்சாட் அறிக்கையில் உள்ளடங்குகின்றமை இந்த அறிக்கை முக்கியம் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது எனலாம். எனினும், சபையின் கௌரவத்திற்குப் பொருந்தாத சொற்கள் மற்றும் விவாதங்கள் ஹன்சாட் அறிக்கையில் சேர்க்கப்பட மாட்டாது. அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்கிவிடுமாறு சபாநாயகர் உத்தரவிடுவார்.

இந்த முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டுதான் ஹன்சாட் அறிக்கையினை ‘நாடாளுமன்றத்தின் சத்தியக் கண்ணாடி’(True Mirror of Parliament) என்றும் ‘வரலாற்றின் செவி உணரி’ (Auditory of History) என்றும் அழைக்கின்றனர்.

ஹன்சாட் அறிக்கைக்கு நீண்டகால வரலாறு ஒன்று உள்ளது. மேலும், நாடாளுமன்ற சபை அமர்வுகள் கூடும்போது, சபையில் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிகழ்த்துகின்ற உரைகளில் ஒரு சொல்லைக் கூடத் தவறவிடாது குறித்துக்கொள்ளும் விசேட திறனுடைய ஹன்சாட் அறிக்கையாளர்கள் நாடாளுமன்றத்தில் பணியாற்றுகின்றனர். இவ்வாறு தயாரிக்கப்படும் அறிக்கை பிரதித் தொகுப்பாளர் மற்றும் பிரதான தொகுப்பாளரின் இறுதி கண்காணிப்பின் பின்னர் அரச அச்சகத்தில் இறுதி வடிவம் பெற்று முதன்முதல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பின்னர் அரச அலுவலகங்கள் அனைத்திற்கும் இலவசமாக வழங்கப்படுகின்றது. அரச வெளியீட்டுத் திணைக்களப் பிரிவில் பொதுமக்கள் ஹன்சாட் அறிக்கையினைக் கொள்வனவு செய்ய முடியும்.





இலங்கையில் ஹன்சாட் அறிக்கையானது, 1870 ஆம் ஆண்டு முதல் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் அரசியலமைப்பு அதிகார மற்றும் நிறைவேற்று அதிகாரப் பிரிவுகளின் கீழ் இலங்கை இக்காலப்பகுதியில் நிர்வகிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அக்காலப் பகுதியில் இலங்கையின் ஆட்சிமொழி ஆங்கிலமாக இருந்தமையால், ஆங்கில மொழியில் மட்டுமே ஹன்சாட் அறிக்கை வெளியானது. அதன்பின்னர் கடந்த 12 தசாப்தங்களில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் காரணமாக, ஹன்சாட் மூன்று மொழிகளிலும் வெளிவரத் தொடங்கியது. மும்மொழிகளிலும் சபையில் உரையாற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது தாய்மொழியில் நிகழ்த்தும் உரை அவ்விதமே ஹன்சாட் அறிக்கையிலும் வெளியானது. அத்துடன், சபையின் கட்டளைகள், தீர்மானங்கள், தலைப்புகளும்கூட மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டன.



ஆரம்ப காலம்முதல் இன்றுவரை ஹன்சாட் அறிக்கை பல மாற்றங்களுக்குள்ளாகியுள்ளது. அறிக்கையின் முதல்பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள அரச இலச்சினை நான்கு தடவைகள் மாற்றங்களை எதிர்கொண்டது. இந்த மாற்றம் ஹன்சாட் அறிக்கையில் மட்டுமன்றி, அனைத்து அரச ஆவணங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. காலனித்துவ ஆட்சி காலப்பகுதியில் அரச ஆவணங்களில் இருந்த பிரித்தானிய இலச்சினைக்குப் பதிலாகச் சிங்க இலச்சினை பொறிக்கப்பட்டு பின்னர் தர்மசக்கரம் பொறிக்கப்பட்டது.

1982 ஏப்ரல் 26 ஆம் திகதி கோட்டே புதிய நாடாளுமன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வைபவத்தின் பின்னர் ஹன்சாட் அறிக்கையில் மட்டும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. சபாநாயகரின் அதிகாரச் சின்னமான செங்கோல் நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இலச்சினையாக ஹன்சாட் அறிக்கையின் முதல் பக்கத்தில் அச்சேற்றப்பட்டது. இதன்பின்னர், அரசியலமைப்பிலும் அனைத்து நாடாளுமன்ற ஆவணங்களிலும் செங்கோலே பொறிக்கப்பட்டுள்ளது. ஜயவர்தனபுர புதிய நாடாளுமன்றத்தின் ஹன்சாட் அறிக்கையின் நீள அகலமும் அதிகரிக்கப்பட்டது. பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கெனடாவிலும் இவ்வாறே ஹன்சாட் அறிக்கை காணப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அமுலாக்கத்தின்போது ‘ஹன்சாட்’ என்ற சொல் நாடாளுமன்ற விவாதங்கள் அறிக்கையின் அட்டையில் இருந்து அகற்றப்பட்டபோதிலும், 1977 இல் மீண்டும் அச்சொல் பயன்படுத்தப்பட்டது.

விஜய் உடன் TOP NEWS வழங்கும் வாரம் ஒரு iPod... வெல்லுங்கள்





பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் ‘விஜய்’ பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ‘Top News’ SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை ‘விஜய்’ பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

‘Top News’ SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை ‘விஜய்’ கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 02.10.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.





04.09.2013 ‘Top News’ கேள்விக்கான விடை:
23 வயது
ipod பரிசை பெறுபவர் :
யதுர்ஷனா சுகுமார்,
19, பெயிலி வீதி,
நாவலப்பிட்டி.


விஜய் – TOP NEWS
இவ்வார கூப்பன் (25.09.2013)
..........................................
விடை: ..................................
பெயர்: ..................................
வீட்டு முகவரி: ..........................
..........................................
பாடசாலை முகவரி: ......................
..........................................
வயது: ..................................
தொ.பே.இல: ............................

அனுப்ப வேண்டிய முகவரி:
iPod பரிசுப் போட்டி,
‘விஜய்’
த.பெ.இல: 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார மறுமலர்ச்சியின்போது வெளிவந்த பத்திரிகைகள்

| பத்திரிகைகள் | மொழி | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|
| உதயதாரகை | தமிழ் | 1841 |
| லங்கா லோகய | சிங்களம் | 1860 |
| லக்மினி கிரண | சிங்களம் | 1862 |
| லக்மினி பஹன | சிங்களம் | 1864 |
| அருணோதய | சிங்களம் | 1864 |
| கத்தோலிக்க பாதுகாவலன் | தமிழ் | |
| பாலிய நேசன் | தமிழ் | |
| ஞானரத்ன பிரதீபய | சிங்களம் | 1866 |
| சரசவிசதரெச | சிங்களம் | 1880 |
| இந்து சாசனம் | தமிழ் | 1888 |
| தினமின | சிங்களம் | |
| வீரகேசரி | தமிழ் | 1930 |
| தினகரன் | தமிழ் | 1931 |



ம.குலேந்திரன்,
கட்டபுலா த.ம.வித்தி.,
கொலப்பத்தனை.



## பொறுமையின் பெருமை

வெளிநாட்டில் சமயத்தைப் பரப்புவதற்காகச் செல்ல இருந்த சீடன் ஒருவன் தன் குருவை வணங்கினான். "நீ எந்த சூழலிலும் பொறுமையாக இருப்பாயா?" என்று கேட்டார் குரு.

"பொறுமையாக இருப்பேன் குருவே!" என்றான் சீடன். "உறுதியாக உன்னால் பொறுமையாக இருக்க முடியுமா?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

"இருப்பேன் குருவே" என்றான் அவன்.

"நன்றாகச் சிந்தித்துச் சொல். உன்னால் எந்த நிலையிலும் பொறுமையாக இருக்க முடியுமா?" என்று மறுபடியும் கேட்டார்.

சீடன் பொறுமை இழந்துவிட்டான். "என்ன குருவே" நான்தான் திரும்பத் திரும்பப் பொறுமையாக இருக்க முடியும் என்று சொல்கிறேனே. நீங்கள் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்கிறீர்களே?" என்று அலுத்துக்கொண்டான். "நான் ஒரே கேள்வியை நான்கைந்து முறை கேட்டவுடனே நீ பொறுமை இழந்துவிட்டாயே. இப்போது தெரிகிறதா பொறுமையாக இருப்பது அவ்வளவு எளிய செயல் அல்ல." என்றார் குரு. தன் தவறை உணர்ந்தான் சீடன்.

எச்.எம்.அஸ்லம்
ஒட்டமாவடி

## நிலா



எம்.ஜெ.எஃப்.ரிபா,
கல்லாவ மு.வித்.,

*வட்ட வட்ட வெண்ணிலா*
*தங்கத் தட்டு போல் மின்னுது*
*எட்டிப் பிடிக்கத் தோணுது*
*நான் ஏணிக்கெங்கே போவது?*

*பார்க்கப் பார்க்க அழகுதான்*
*நல்ல பாவைப் போல் வெளிச்சம்தான்*
*வியர்க்க வியர்க்க ஓடுது*
*விண்ணில் நிலா விளையாடுது!*

*பகலில் என்ன செய்யுது?*
*நிலா பள்ளிக்கூடம் போகுது*
*பாடம் என்ன படிக்குது?*
*நிலா படுத்து நன்றாய்த் தூங்குது!*



## துறவியின் யுக்தி

நடு நடுங்க வைக்கும் குளிரான இரவில் துறவி ஒருவர், ஒரு பணக்கார வியாபாரியின் வீட்டுக் கதவைத் தட்டினார். கதவைத் திறந்த வியாபாரி, துறவியைக் கண்டதும், அவரை உடனே உள்ளே அழைத்தார். தரையில் கனமான கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. கணப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அந்தக் கதகதப்பான அறையில், வசதியான சோபாக்களில் அவர்கள் அமர்ந்தனர். "தாங்கள் வந்த விடயத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று வியாபாரி, துறவியைப் பார்த்துக் கேட்டார்.

"ஏழை மக்களுக்குக் குளிரைத் தாங்குவதற்கான ஆடைகள் வாங்குவதற்காக நான் பணம் திரட்டும் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறேன். அதுவும் இந்த வருடம் குளிர் மிகவும் அதிகமாகவே இருக்கிறது" என்று கூறினார் துறவி.

"எமது மக்கள் இதற்கெல்லாம் பழக்கப்பட்டவர்கள்தானே!" என்று மிகவும் அலட்சியமாகக் கூறினார் வியாபாரி.

"எப்படி இருந்தாலும் எம்மால் முடிந்த உதவியை நாம் செய்யத்தானே வேண்டும்!" என்று துறவி கூறினார்.

"நீங்கள் கூறுவதும் சரிதான்! ஆனால், நான் உதவியென்று செய்தால், ஏதாவது பெரிதாகக் கொடுக்க விரும்புகிறேன். அதனால், உங்களுக்கு எதுவும் கொடுக்க முடியாது. மன்னியுங்கள்!" என்று வியாபாரி கூறினார். துறவி, மிகுந்த ஏமாற்றத்துடன் அங்கிருந்து கிளம்பினார்.



இரண்டு நாட்கள் சென்றன. மீண்டும் அத்துறவி, அந்த வியாபாரியின் வீட்டுக் கதவைத் தட்டினார். இந்த முறையும் வியாபாரி, துறவியை வீட்டுக்குள் அழைத்தார். ஆனால், துறவி வீட்டுக்குள் நுழையாமல் வெளியே அப்பால் நின்றுகொண்டார். "இந்த வழியே போய்க்கொண்டிருந்தேன். அப்படியே உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று வியாபாரியைப் பார்த்துத் துறவி கூறினார்.

"சரி உள்ளே வாருங்கள். வெளியே மிகவும் குளிராக இருக்கிறது" என்று கூறினார் வியாபாரி. "இல்லை நான் அவசரமாக போய்க்கொண்டிருக்கிறேன். வீட்டில் அனைவரும் நலமா?" என்று துறவி, விசாரித்தார்.

"எல்லோரும் நலம்" என்று கூறிய வியாபாரி குளிரால் தன் ஆடையை இறுக்கிக்கொண்டார். "உங்களுடைய தொழில் எப்படி இருக்கிறது?" என்று மீண்டும் வியாபாரியைப் பார்த்துக் கேட்டார் துறவி. குளிரில் நடுங்கிய வியாபாரி, ஏழை மக்கள் குளிரில் எவ்வாறு துன்பப்படுவார்கள் என்பதை இப்போது நான் உணர்ந்துகொண்டேன். முதலில் உள்ளே வாருங்கள்" என்று துறவியை உள்ளே அழைத்தார் வியாபாரி. பின்னர், துறவியிடம் ஏழைகளுக்கு உதவி புரிவதற்கெனப் பெரிய தொகைப் பணம் கொடுத்தும் உதவினார்.

## கணினி பற்றிய தகவல்கள்



- ★ முதல் கணக்கு இயந்திரம் - அபக்கஸ்
- ★ முதலில் உருவான கணினிப்பொறி மொழி - Fortan
- ★ கணினியின் தந்தை எனப் போற்றப்படுபவர்-சார்ள்ஸ் பாபேஜ்
- ★ கணிப்பான் (Calculatar) கண்டறிந்தவர் - பரோஸ் - 1988
- ★ கணினி யுகத்திற்கு வித்திட்டவர்கள் - சீனர்கள்
- ★ கணினி மொழியை அறிமுகப்படுத்தியவர்கள் - தோமஸ் கெனடி, ஜோன் மெகணி
- ★ முதன்முதலில் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட கணினியின் பெயர் - அப்பிள் (Apple)
- ★ முதலாவது தானியங்கிக் கணினி - எனியாக் - 1945 இல் கண்டறியப்பட்டது
- ★ கணினி உற்பத்தியில் பிரசித்திபெற்ற நிறுவனம் -IBM, Microsoft
- ★ முதலாவது மின்னணு Computer - கொலாசஸ், 1943 இல் கண்டறியப்பட்டது

எம்.எப்.எம்.அஸ்ஃபாக்,
குருந்துகஹஎல, அக்குறணை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## அறிவுக்கு விருந்து - 433 விடைகள்

**போட்டி: 01**




'horse' என்பதற்குப் பதிலாக 'donkey' என்று வர வேண்டும். தவறுக்கு வருந்துகிறோம்.

**போட்டி: 03**



**போட்டி: 04**

1. சரக்குக் கப்பல்
2. மா
3. வாத்தியக்கருவி
4. நீர்நிலை
5. விளையாட்டு

**போட்டி: 05**

1. எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்.
2. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
3. பசி வந்தால் பத்தும் பறக்கும்.
4. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 433 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஏ.கௌசல்யா, கல்முனை.

**போட்டி: 02**
ஆகிப் அஹமட், நிந்தவூர்-02.

**போட்டி: 03**
தே.லோஜிதன், மன்னார்.


**போட்டி: 04**
பஸீஹா பர்வின், மடவளை பஸார்.


**போட்டி: 05**
எஃப்.மொஹமட், முறுதகஹமுல.

**பாராட்டுப் பெறுவோர்:**


- எம்.ஷிப்லி, ஏறாவூர்.
- ஆர்.டிலக்ஷான், வவுனியா.
- சு.சுரேனிகா, ஏதண்டுகொடுவ.
- எம்.சம்ரின், தொட்டவத்த.
- மாஷிதா, பேருவளை.
- ஏ.புளோரியன், மட்டக்களப்பு.
- எஃப்.ஸைனப், தும்புளுவாவ.
- சியாமா ரபீக், பஹலபிடிய.
- எஃப்.அரபா, பந்தாவ.
- சி.ஷர்மிலன், கொக்குவில்.

## வித்தியாசங்களில் X அடையாளமிடுக 2





## அடுத்து வர வேண்டியது எது? 3






தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.10.02 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 436**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## சொற்புணர்ச்சிக்குரிய பொருத்தமான விடையில் கோடிடுக 4

1. மரவேர் = மர+வேர் / மரம்+வேர் / மரத்தின் + வேர்
2. நீர்த்துளி = நீர்+துளி / நீர்+அத்துளி / நீர்த்+துளி
3. திருவடி = திரு+வாடி / திரு+அடி / திரு+வடி
4. மணியோசை = மணி+யோசை / மணி+இசை / மணி+ஓசை

## 1


இங்குள்ள புதிர்களுக்கு '3' என்பது விடையாக வர வேண்டும். முயற்சித்துப் பாருங்கள்.




## ஒருமையில் உள்ளவற்றைப் பன்மையிலும் பன்மையில் உள்ளவற்றை ஒருமையிலும் தருக 5

1. வாள் - ..............................
2. குடம் - ..............................
3. நுட்பங்கள் - ..............................
4. எழுத்து - ..............................
5. படகுகள் - ..............................
6. வேண்டுதல்கள் - ..............................

## குறுக்கெழுத்துப் போட்டி இல.52



**மேலிருந்து கீழ்**

01. கடைசி.
02. வாழையில் ஒரு வகை.
03. அரசர்கள் இப்படியும் இரவில் நகர்வலம் சென்றனராம்.
05. உடலில் இதன் அளவு கூடினால் வாந்தி வரும் என்பர்.
07. பெரிய.
09. கோல்.(தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. பரிவு.
04. மிளகு வகையைச் சேர்ந்த மூலிகைச் செடி.
06. நேரம். (மாறியுள்ளது)
07. இறத்தல்.
08. முற்காலத்தில் தூரத்தினைக் கணக்கிட்டுக் கூறப்பட்ட ஓர் அளவு.
10. நாங்கள்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.51 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வா | டா | 2 ம | ல் | லி | கை |
| ண | ■ | ளி | 3 கி | ■ | 4 தொ |
| வி | ■ | 5 கை | மு | ஞ | ■ |
| ல் | 6 வே | ■ | ரு | ■ | 7 ச |
| ■ | னி | ■ | 8 க | டு | கு |
| 9 மு | ல் | லை | ■ | 10 ப | னி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடத்தலவின்னையைச் சேர்ந்த பைசால்-றியாஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் ஆகில், தனது ஐந்தாவது பிறந்தநாளை 27.09.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



முல்லைத்தீவைச் சேர்ந்த மாஹிர் -ஹம்ஸிலா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஹஸ்மா, தனது நான்காவது பிறந்ததினத்தை 28.09.2013 அன்று புத்தளத்தில் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.






மாபோல-இராஜசிங்க வீதியைச் சேர்ந்த இர்ஷாத்-ரிபாஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் இன்ஷாத், தனது முதலாவது பிறந்தநாளை 08.10.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ஆஷிகா அரபாத்)*



புத்தளம், 5 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மாஹிர்-ஹம்ஸிலா தம்பதியரின் மூத்த புதல்வன் முஹமட் மஹாஸ், தனது பதினைந்தாவது பிறந்தநாளை 19.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



கிளிநொச்சி-தருமபுரத்தைச் சேர்ந்த ஆனந்தன்-பகீரதி தம்பதியரின் செல்வப் புதல்வன் தனுசியன், தனது பத்தாவது பிறந்தநாளை 12.09.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



ஏ.அஸீலா,
அல்-மின்ஹாஜ் மத்.கல்.,
ஹபுகஸ்தலாவ.



எஸ்.மரியம்,
முபாரக் தேசிய பாட., மல்வானை.



க.லுஜீவன்,
இந்து.தே.கல்., மாத்தளை.




என்.சுஹைர்,
அல்-ஹிஜ்ரா ம.வித்.,
முள்ளிப்பொத்தானை.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



அல்தாப் அலி அக்பர்,
அஷ்ராக் ம.வித்., அம்பகொட.



வி.லிந்துஜன், .
விபுலானந்தாக் கல்., வவுனியா.



எஸ்.சஹீல் அஹமட்,
சுங்கம்வெளி, கலாவெவ.



எல்.பாத்திமா ஸுர்பா,
ஆமிஷா பாலிகா ம.வித்.,
அக்கரைப்பற்று-04.



ஜெ.அஸாம்,
அன்னூர் தே. பாட.,
வாழைச்சேனை.




ஹப்சா,
ஹி.மு.ம.வித்., கண்டி.



நா.ஹரிஸ்ராகுல்,
வவுனியா த.ம.வித்.,
வவுனியா.

## உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

### ஜீன்-லியோன் ஜெரோமி (1824-1904)



பிரான்ஸ் நாட்டு ஓவியராகவும் சிற்பியாகவும் அறியப்பட்ட ஜீன்-லியோன் ஜெரோமி, *1824* ஆம் ஆண்டு மே *11* ஆம் திகதி பிரான்ஸின் வெசோல் எனும் தன்னாட்சிப் பகுதியில் பிறந்தார். கலைத்துறைக்குட்பட்ட சம்பிரதாய முறைகளைப் பின்பற்றி வரலாற்று விடயங்கள், கிரேக்க தொன்மவியல், கீழைநாட்டு மரபு என்பனவற்றைக் கருவாகக் கொண்டு ஏராளமான ஓவியங்களைப் படைத்துள்ளார்.

ஓவியராகத் திகழ்ந்த காலத்திலேயே, ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

*1840* இல் பெரிஸ் சென்று, போல் டெலாரோச் எனும் ஓவியரிடம் ஓவியத்துறை தொடர்பில் கற்றுக்கொண்டார். *1843* இல் டெலாரோச்சுடன் இத்தாலி பயணமானார். *1844* இல் அங்கிருந்து மீண்டும் பெரிஸ் திரும்பி, சார்ள்ஸ் க்ளியர் எனும் சுவிஸ் ஓவியரிடம் இணைந்து, குறுகிய காலத்திற்கு ஓவியம் தொடர்பில் கற்றுக்கொண்டார். பின்னர், பிரான்ஸிலுள்ள Ecole des Beaus-Arts எனும் நுண் கலைப் பள்ளியில் இணைந்தார். *1848* இல் Prix de Rome எனும் ஓவியத் துறை மற்றும் சிற்பத்துறையில் பயிலும் மாணவர்களுக்கான புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொண்டு, அதன்மூலம் தனது ஓவியத்திறனை மேலும் வளர்த்துக்கொண்டார். இதனை அடுத்து, நாட்டின் பல்துறைசார் முக்கியஸ்தர்களினதும் அபிமானத்துக்குரிய ஓவியராகத் திகழ்ந்தார்.



நீரூற்றில் ஒட்டகங்கள்



The tulip folly

The Virgin-infant Jesus and St.John, The tulip folly, நீரூற்றில் ஒட்டகங்கள், கோடை மதியத்தில் ஏரிக் கருகில், மைக்கல்எஞ்சலோ, பொய்கையில் நீர் அருந்தும் சிங்கம் போன்ற ஓவியங்கள் உட்பட,மேலும் பல்வேறு புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்த ஜீன்-லியோன் ஜெரோமி, *1904* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *10* ஆம் திகதி, பெரிஸ் நகரிலுள்ள தனது ஓவியப் பணிமனையில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் (தரம் -04)

பெயர்: ..................................................

★ பின்வரும் வினாக்களில் சரியான விடையின்கீழ்க் கீறிடுக.

01. பின்வருவனவற்றுள் 'சூரிய நாட்ட பூ' எது?
1. தாமரை 2. மல்லிகை 3. வாடா மல்லிகை 4. கடுபுல்

02. தை மாதத்தில் பூக்கும் பூ எது?
1. வேம்பு 2. ரோஜா 3. இறப்பர் 4. தேக்கு

03. ஆண்டுக்கொரு தடவை மட்டும் காய்க்கும் பழம் எது?
1. பப்பாசி 2. கொய்யா 3. வாழை 4. மரமுந்திரிகை

04. பயிர்ச்செய்கையில் விவசாயிக்கு உதவுவது;
1. தேனீ 2. வண்ணத்துப்பூச்சி
3. மண்புழு 4. மேற்கூறிய யாவும்

05. விவசாயிக்கு நத்தையைப் பிடித்துண்டு உதவும் பிராணி யாது?
1. செண்பகம் 2. காகம் 3. பாம்பு 4. எலி

06. ஔடதபானம் தயாரிக்க உதவும் பூ எது?
1. மல்லிகை 2. வில்வம்பூ 3. தாமரை 4. அலரி

07. கால்கள் அற்ற பிராணி பின்வருவனவற்றுள் எது?
1. மரவட்டை 2. உண்ணி 3. அட்டை 4. மட்டைத்தேள்

08. விசேட கூடு கட்டி வாழும் பிராணி எது?
1. காகம் 2. எலி 3. குயில் 4. சிலந்தி

09. பறவைகளில் விசேட இயல்பைக் காட்டும் பறவை எது?
1. வௌவால் 2. தூக்கணாங்குருவி
3. சிட்டுக்குருவி 4. ஆந்தை

10. அதிக மோப்ப சக்தியுள்ள பிராணி எது?
1. யானை 2. பசு 3. பூனை 4. நாய்

11. மிகச் சிறிய ஒலியைக்கூட கேட்கக்கூடிய பிராணி எது?
1. பூனை 2. எலி 3. நாய் 4. வௌவால்

12. ஆடையில் ஒட்டியுள்ள தார்க் கறையை அகற்ற உதவுவது;
1. மண்ணெண்ணெய் 2. சவர்க்காரம்
3. சலவைத்தூள் 4. நீர்

13. மரப்பலகையில் அலங்காரவேலை செய்வதற்குப் பயன்படும் உபகரணம்;
1. கத்தி 2. உளி 3. சீவுளி 4. கோடரி

14. வகுப்பறையில் பயன்படுத்தப்படும் உபகரணம்;
1. கத்தி 2. மேசை 3. புத்தகம் 4. வெண்கட்டி

15. கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி செய்யக்கூடிய வாத்தியக் கருவி;
1. சல்லாரி 2. நாதஸ்வரம் 3. மேளம் 4. உடுக்கை

16. நோயிலிருந்து உடலைப் பாதுகாக்கும் உணவு வகை;
1. காபோவைதரேற்று 2. புரதம்
3. கொழுப்பு 4. விற்றமின்கள்

17. உடலுக்குத் தேவையான எல்லா வகை சத்துக்களும் அடங்கிய உணவு;
1. கீரை 2. இறைச்சி 3. பால் 4. மீன்

18. வல்லாரையை உப்பு நீரில் கழுவுவதன் நோக்கம் யாது?
1. கிருமிகளை அழித்தல் 2. சுவையூட்டல்
3. பழுதடையாமல் இருத்தல் 4. பாதுகாத்தல்

19. மிக உயரமான இயற்கை நீர் வீழ்ச்சி;
1. பம்பரகந்த 2. துன்கிந்த 3. விக்டோரியா 4. தியலும




20. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் உணவு நஞ்சாகும்?
1. பல்லி விழுதல் 2. உணவுடன் உப்பு சேருதல்
3. உணவில் ஈ மொய்த்தல் 4. எறும்பு மொய்த்தல்

## பகுதி - 2

01. பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் அடையாளமிடுக.

01) நன்கு சமைக்காத இறைச்சியை உண்பதால் குடற்புழு நோய் ஏற்படும் (......)
02) போமலின் இடப்பட்ட மீனை உண்பதால் மரணம் ஏற்படலாம் (......)
03) கிரிக்கெட் விளையாட்டில் ஒரு குழுவில் பத்துப்பேர் மட்டும் உள்ளனர் (.......)
04) தேசிய கொடியில் முஸ்லிம் மக்களைக் காட்ட மஞ்சள் நிறம் உதவுகின்றது (......)
05) எமக்கு கலப்புணவு அவசியமற்றது (......)
06) அதிகளவு நீரை அருந்துவதால் பல நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கலாம் (......)

02. சரியான விடையை இடைவெளியில் நிரப்புக.

*(களனி, இரவு, மூடி, குளிரூட்டி, வியர்வை)*

01) இலங்கையில் மேல்மாகாணத்தில் கடலுடன் கலக்கும் ஆறு ........................
02) உணவை சமைத்த பின் .................................. வைத்தல் வேண்டும்.
03) .................................. உணவு உட்கொண்டபின் பல்துலக்க வேண்டும்.
04) உணவைப் பாதுகாக்க ................................ பயன்படுகிறது.
05) சீருடைகள் ............................... காரணமாக அழுக்கடையும்.

03. 01) கழிவுப் பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய பொருட்கள் 2 தருக?
..................................................

02) வயல் வேலை செய்யுமிடத்தில் உள்ள உபகரணம் 2 தருக?
..................................................

03) தினமும் பூக்கும் பூக்களால் ஏற்படும் நன்மைகள் 2 தருக?
..................................................

04) சித்திரை மாதப் பூக்கள் 2 தருக?
..................................................

05) உமது பாடசாலையை அழகுபடுத்த நடக்கூடிய தாவரங்கள் சில தருக?
..................................................

06) மூன்று இதழ்ப் பூ 2 தருக?
..................................................

07) சமூகமாக வாழக்கூடிய பிராணிகள் 2 தருக?
..................................................

08) விலங்குப் புரத உணவு 2 தருக?
..................................................

09) நேரம் தவறி உண்பதால் ஏற்படக்கூடிய நோய் ஒன்று தருக?
..................................................

10) உடலுக்கு அதிகளவு சக்தியைத் தரக்கூடிய உணவு வகை 3 தருக?
..................................................


11) ஏப்ரனைத் தைத்து அழகுபடுத்த நீர் பயன்படுத்தும் தையல் அலங்காரம் ஒன்று தருக?
..................................................

12) இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள் எவை?
..................................................

13) காய்கறி, கீரை வகைகள் போஷாக்கு சத்து குறையக் காரணம் யாது?
..................................................

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐரோப்பாவின் வன அழகினைத்தரும் ‘ஹக்கல பூங்கா’

இலங்கையில் உள்ள தாவரவியற் பூங்காக்களில் ஹக்கல பூங்காவுக்கு முதன்மையான இடம் கிடைக்கின்றது. கடல் மட்டத்திலிருந்து 1,670 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள ஹக்கல பூங்கா 2,100 மீற்றர் உயரமான ஹக்கல மலையின்மீது அமைந்துள்ளது. மலையின் பொதுவான வெப்பநிலை 15.8 பாகை செல்சியசாகும். அதிகக் குளிர்காலத்தில் 3.4 பாகை செல்சியசாகக் குறைந்துவிடுகின்றது. வருடாந்த மழைவீழ்ச்சி 2,300 மில்லிமீற்றராகும். வருடத்தில் 200 தடவைகளுக்கு மேல் ஹக்கல பூங்காவிற்கு மழை கிடைப்பது விசேட அம்சமாகும்.


குளிர்மையான ஈரலிப்புக் காலநிலையைக் கொண்ட இப்பகுதியின் மரங்கள் மலைசார்ந்த ஈரலிப்பான வலயக் காடுகளின் இயல்புகளை வெளிப்படுத்துகின்றன. இந்தப் பூங்காவின் மண் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறமானது. யானையின் தலைப்பகுதியை உருவகப்படுத்துவதனால் ஹக்கல என்ற சொல் பயன்பாட்டிற்கு வந்தது. இராவணனின் ஆட்சிக்காலத்தில் மருத்துவ குணம் மிக்க தாவரங்களைக்கொண்ட பூங்காவாக ஹக்கல பூங்கா இருந்துள்ளது என்று கருதப்படுகின்றது.

1849 இல் பேராதனை தாவரவியல் நிறுவனத்தின் பணிப்பாளராகப் பதவி வகித்த ஜீ.ஹென்ரி கேத்வேட்ஸ், சிங்கோனா பயிர்ச்செய்கை தொடர்பாக இங்கு ஆராய்ச்சி செய்துள்ளார். 1861 இல் முதன்முதல் இங்கு ஆய்வுப் பயிர் ஒன்றை பயிரிட்டார்.



1881 இல் வில்லியம் நொத் என்பவர் பணிப்பாளரான பின்னரே இந்தப் பூங்கா தாவரவியற் பூங்காவாக உத்தியோகபூர்வ அந்தஸ்தினைப் பெற்றது. கி.பி. 1904 ஜூலை மாதம் அவர் ஓய்வுப் பெற்றதன் பின்னர் கொம்பனித்தெரு ‘கிவ்’ பூங்காவின் நிர்வாகியாக இருந்த நொக் குடும்பத்தின் உறுப்பினரான ஜே.ஜே.நொக் அப்பதவியினை ஏற்றுக் கொண்டார். அதன்பின்னரான ஜே.ஜே.நொக், ஜே.கே. நொக், வில்லியம் நொக் காலப்பகுதிகள் ஹக்கல பூங்காவின் பொற்காலமாகக் கருதப்படுகின்றன.

தாவரவியல் விஞ்ஞானப் பெறுமதியினைக்கொண்ட 6,000 தாவரங்கள் இங்குள்ளன. தாவரவியல் மற்றும் மலர்கள் பூங்காவாகச் சுற்றுலாப் பயணிகளையும் தாவரவியல் அறிஞர்களையும் இந்தப் பூங்கா கவர்ந்துள்ளது. பூங்காவின் அனைத்து மரங்களிலும் தாவரவியல் விஞ்ஞானப் பெயர் மற்றும் அதன் தாயகம் தொடர்பான விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையானது ஆய்வாளர்களுக்கு உதவியாக உள்ளது.

இங்கு இங்கிலாந்து உட்பட முக்கியமான ஐரோப்பிய நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட தாவரங்கள் பாரியளவில் காணப்படுகின்றமையால், ஐரோப்பிய வனாந்தரங்களின் இயல்புகளை அறிந்துகொள்ள இப்பூங்கா உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் சாரணர் உலகம்

# 14 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1975

நோர்வே நாட்டில் Lillehammer Lakemjosa என்ற இடத்தில் 1975 இல் 14 ஆவது உலக சாரணர் ஜம்போரி நடைபெற்றது. இது 'Nordjamb 75' என்ற சொல்லால் அழைக்கப்பட்ட





சிறப்பான ஜம்போரியாகும். இதில் 94 நாடுகளைச் சேர்ந்த 17,259 சாரணர்கள் கலந்துகொண்டனர். டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, சுவீடன் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்த ஒழுங்கமைப்புடன் செய்யப்பட்டதினால், இந்த 14 ஆவது உலக சாரணர் ஜம்போரியின் நோக்கம் 'ஐந்து விரல்கள், ஒரு கை' (Five Fingers, One Hand) என அறிவிக்கப்பட்டது.

சாரணர் இயக்கத்தின் ஐந்து மண்டலங்களைக் குறிக்கும் வகையில் நோக்கம் அறிவிக்கப்பட்டது. 14 ஆவது உலக சாரணர் ஜம்போரியை நோர்வே நாட்டின் மன்னர் ஆரம்பித்து வைத்தார். சுவீடன் நாட்டு மன்னரும், மொராக்கோ நாட்டின் இளவரசரும் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர்.

**14 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1975**
**நோர்வே**

17,259 சாரணர்கள்

Lillehammer

94 நாடுகள்

ஜூலை 29-ஒகஸ்ட் 7

NORDJAMB-75 14th WORLD JAMBOREE







### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| அஸர்பைஜான் | 1,677 | 2000 | 1997 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

# கடற் சாரணியம் தொடர்பாக பவல் அவர்களின் கார்ட்டூன்


சாரணியத்தில் கடற்சாரணர்களும் ஒரு பிரிவினராவர். சாரணியத்தின் தந்தையான பவல் அவர்கள் கடற் சாரணியம் தொடர்பிலும் கூடிய கரிசனை கொண்டவராகத் திகழ்ந்தார். அதற்கமைய, கடற்சாரணியத்தையொட்டி பவல் அவர்கள் வரைந்த சில கார்ட்டூன்களை இங்கே காணலாம்.











For Organisers and Scoutmasters.

SEA SCOUTING FOR BOYS.

By Sir Robert Baden-Powell, K.C.B.

PRICE 6d.

கடற் சாரணியத்தின் அறிமுக கர்த்தாவான ரொபர்ட் ஸ்டீவன்ஸன் ஸ்மித் பேடன் பவல் அவர்கள் எழுதிய 'கடற் சாரணியம்' தொடர்பான கையேட்டின் முகப்புப் பக்கத்தையே இங்கு காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கேனரைக் கொண்ட நவீன பேனா

ஏதேனும் ஒரு கடிதம் அல்லது புத்தகத்தின் பக்கத்தை 'ஸ்கேன்' செய்து அதனை ஓர் 'இமேஜ்' mode ஆக மாற்றிக்கொள்ளக்கூடிய புதுவகைப் பேனையொன்று அறிமுகமாகியுள்ளது. 'நோட்மார்க்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பேனையைப் பயன்படுத்துவது மிகவும் இலகுவானதாகும். எவ்வாறு இது தொழிற்படுகின்றதெனில், இந்த பேனையிலுள்ள குறித்த பொத்தானை அழுத்தியவுடன் பேனையிலிருந்து வெளிவரும் லேஸர் கதிரொளியைக் குறித்த கடிதத்தின் மீதோ அல்லது புத்தக பக்கத்தின்மீதோ பிடித்தால் போதுமானது. உடனே அவற்றை அது ஸ்கேன் செய்துவிடும். இதற்கெனப் பயன்படக்கூடிய மெகா பிக்ஸெல் 5 இன் சென்ஸர் ஒன்று இதில் பொருத்தப்பட்டுள்ளது.

இதன் மின்கலத்தை மின்னேற்றம் செய்யுமிடத்து 300 புகைப்படங்களையும் இதில் பிடிக்கமுடியும். அதுமட்டுமன்றி, ஒலிப்பதிவை மேற்கொள்ளக்கூடிய தன்மையையும் இந்த விசேட ஸ்கேனர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேனையின் சிறப்புத் தன்மைகள்



- மைக்ரோ எஸ்டி (Micro SD) மெமரி சிப் இதில் உள்ளது.
- யூ எஸ் பி போர்ட் ஊடாக மீண்டும் மின்னேற்றம் செய்யக்கூடிய லித்தியம் அயன் மின்னேற்றம் பொருத்தப்பட்டுள்ளது.
- பலவர்ணப் புகைப்படங்களைப் பிடிக்க முடியும்.
- 24bit மற்றும் 12bit வர்ணம் மற்றும் மொனோகுரோம் புகைப்படங்களைப் பிடிக்க முடியும்.
- பெறப்படுகின்ற தரவுகளை கணினிக்கு உட்செலுத்துவதற்கான யூ. எஸ். பி கேபிளையும் இது கொண்டுள்ளது.
- சாதாரண பீஸி (PC) கணினிகளில் மட்டுமன்றி, அப்பிள் கணினியிலும் இது செயற்படும்.
- 1000 புகைப்படங்களை சேமித்து வைக்கக்கூடிய சேமிப்பகத்தைக் கொண்டுள்ளது.




பேனையின் முழுநிறை 57gm





புகைப்படங்களின் அளவு பிக்ஸெல் 2048 x 1536

புகைப்படங்களின் 'ரிசோலேஷன்' அளவு 100 - 400dpi

| பேனையின் சேமிப்பு வலு | சிப்பின் சேமிப்பு வலு |
| --- | --- |
| 1MB | 8MB |

### இதன்மூலம் ஸ்கேன் செய்யக்கூடியவை



விசிட்டிங் கார்ட் | புத்தகம், சஞ்சிகை | வெண்பலகை | எழுத்தாக்கங்கள் | பத்திரிகைகள் | காசோலைகள்




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 25, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org